Master of Arts :2011–2012

The Influence of isalm in the western civilization: **ISC-605**

***இஸ்லாத்தின் பரவலில் பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதை முஸ்லிம் படை எடுப்பு வெற்றி ஆட்சி என்பன அடையாளப்படுத்தப்படுவதாக நீர் கருதுகின்றீரா?***

***ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பரவலில் இஸ்பைனில் உமைய்யா ஆட்சியும் பல்கெனியப் பிரதேசங்களில் உஸ்மானிய சாம்ராஜ்யமும் ஏற்படுத்திய தாக்கத்தினை ஆதாரமாகக் கொண்டு உமது கருத்தினை நியாயயப்படுத்துக!***


மாணவர் பெயர்: எம்.ஜே.எம். ரிஸ்வான்

பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559

விரிவுரையாளர் : எம். ஐ. எம். ஜஸீல் (PHD)

(அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

# முன்னுரை

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும் சொந்தமானது. அவனது அருளும், சாந்தியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் வழி நடக்கும் அனைவர் மீதும் உண்டாகட்டுமாக!

அவர்கள் தமது வாயினால் இஸ்லாத்தின் சுடரை ஊதி அணைத்திட விரும்புகின்றனர். இறை நிராகரிப்பாளர்கள் வெறுத்த போதும் அல்லாஹ் தனது பிரகாசத்தைப் பூரணப்படுத்துவதைத்தவிர (வேறொன்றையும்) விரும்புவில்லை. என அல்குர்ஆன் குறிப்பிடுவதற்கு அமைவாக அல்லாஹ்வின் மார்க்கமான இஸ்லாத்திற்கு எதிராக காலம் காலமாகச் செய்யப்பட்டு வரும் காள்ப்புணர்வின் அடிப்படையில் அமைந்த பிரச்சாரங்கள் பலதை இஸ்லாம் உலகில் தோன்றியது முதல் இன்றுவரை அதன் எதிரிகளிடமிருந்து சந்தித்து வருகின்றது.

அவை அனைத்தையும் முறியடித்து தன்னை உலகளாவிய அளவில் உறுதிப்படுத்துவதில் இஸ்லாம் வெற்றி கண்டுள்ளது. ***இஸ்லாத்தின் பரவலில் பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதை முஸ்லிம் படை எடுப்பு வெற்றி ஆட்சி என்பன அடையாளப்படுத்தப்படுவதாக நீர் கருதுகின்றீரா?***

***ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பரவலில் இஸ்பைனில் உமைய்யா ஆட்சியும் பல்கெனியப் பிரதேசங்களில் உஸ்மானிய சாம்ராஜ்யமும் ஏற்படுத்திய தாக்கத்தினை ஆதாரமாகக் கொண்டு உமது கருத்தினை நியாயப்படுத்துக!*** *என்ற ஆய்வுத்தலைப்பின் ஊடாக பின்வரும் தலைப்புக்களின் கீழ் அணுகப்படுகின்றது.*

1- முன்னுரை
2- ஐரோப்பாவில் இஸ்லாம் பரவிய வரலாறு
3- ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பரம்பல்
4- ஐரோப்பா வெற்றி கொள்ளப்படுதல்
5- முஸ்லிம் படை எடுப்புக்கள் ஏன் ?
6- இஸ்லாமிய வெற்றிகள் மக்களை இஸ்லாத்தில் பலவந்தமாக நுழைவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.
7- இஸ்லாமிய ஆட்சியின் கீழ்வாழ்ந்த சிறுபான்மையினரின் நிலை
8- சிறுபான்மை மதத்தவரான திம்மிக்களும் உரிமைகளும்
9- முஸ்லிம் அரசுகள் வழங்கிய மத சுதந்திரம்
**10- போரை இஸ்லாம் மாத்திரமா மேற் கொண்டது?**
11- ஐரோப்பாவில் இஸ்லாமியப் பரம்பல் பலாத்கார வழியில் அமைந்தா? (தோமஸ் அர்னோல்டின் அழகிய சாட்சியம்)
12- இஸ்லாமியப் படைடுப்புக்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கள்
13- இஸ்லாமிய வெற்றிகள் மக்களை இஸ்லாத்தில் பலவந்தமாக நுழைவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

14- இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது

15- நபித்துவரலாற்று நிகழ்வுகள், வராற்றுச் சான்றுகள்

16- பலவந்தமாக மக்களை இஸ்லாத்தில் நுழைவிப்பதற்காகவே ஜிஹாத் செய்தனர். (பைபிள் சாட்சியம்)

17- இஸ்லாமியப் போரின் நோக்கங்கள்

18- ஜிஸ்யா என்ற பெயரில் வரிகள் விதித்து சிறுபான்மையினரை வதைத்தனர்.

19- பிற மதத்தவரின் பொருள்கைளை ஜிஹாதின் பெயரால் சூறையாடினர்

20- முடிவுரை

21- உஸாத்துணைகள்

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் இஸ்லாமிய உலகில் பலரால் பல அமைப்பில் அரபு மொழியில் எழுதப்பட்டிருப்பதை அவதானித்த பின்னர். நான் எனது ஆய்வினை இந்த அமைப்பில் அமைத்துக் கொள்ள வேண்டும் என முடிவு செய்து முன்வைத்துள்ளேன்.

மனிதன் என்ற வகையில் தவறுகள் ஏற்படலாம். எழுத்தானாகிய நான் முஸ்லிம் என்ற வகையில் எனது மதம் எனக்குப் புனிதனமானது என்ற அடிப்படையில் அதற்கு எதிராக ஆதராமற்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற போது ஆக்ரோஷமாகவும் பதில் கூறப்பட்டிருக்கலாம். அது சிலருக்கு கசப்பாகவும் இருக்கலாம்.

தனது நிலையில் இருந்து அணுகினால் என் நிலைதான் அனைவருக்கும் என்பதே அனுபவமாகும். அல்லாஹ் இதில் உள்ள நிறைகள் பொருந்திக் கொண்டு குறைகளை மன்னிப்பானாக! எனது கல்வி வளர்ச்சிக்கு காரணமாக அமைந்த அனைத்து விரிவுரையாளர்களையும், ஆசான்களையும், வழிகாட்டிகளையும் அவனது சுவனத்திற்கு உரியவர்களாக மாற்றுவானாக எனப் பிரார்த்தனை செயது விடை பெறுகின்றேன்.

**இவண்: எம். ஜே. எம். ரிஸ்வான்**

***பதிவு இலக்கம்:*** HD/ MA/ 08-09-/559

மாணவர்: அரபு இஸ்லாமிய நாகரீக கற்கைள் துறை பேராதனைப் பல்கலைக்கழகம். பேராதெனிய

# ஐரோப்பாவில் இஸ்லாத்தின் பரம்பல்

இஸ்லாம் நபிகள் நாயகத்தின் காலம் முதல் அதன் பரம்பலைத் தொடங்கிவிட்டது. மக்காவில் குரைஷியரால் சிறுபான்மையினராக நடத்தப்பட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களின் தோழர்களும் மதீனா சென்று இஸ்லாமிய அரசை நிறுவினார்கள். மதீனாவிலும் அவர்களுக்கு எதிராக சதிகள் செய்யப்பட்டன. அங்கு வாழ்ந்த யூதர்களுடன் இணைந்தே இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

மக்கா இறை மறுப்பாளர்களின் தொடர் தொல்லை காரணமாக பொறுமை அதன் எல்லைக் கோட்டைத் தாண்டிய போது காபிர்களால் வலிய வம்புக்கு இழுக்கப்பட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் கெடுமையில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள போர் செய்ய நிர்பந்திக்கப்பட்டார்கள்.

காபிர்களால் அவர்களுக்கு எதிராக பல போர்கள் தொடுக்கப்பட்டன. சில போர்களில் தோல்வியைத் தழுவினாலும் பலதில் பாரிய வெற்றிபெற்றார்கள். மக்கா என்ற நகரை ஹிஜ்ரி எட்டாம் ஆண்டு அதாவது அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கழிந்த பின்னால் அவர்கள் அந்நகரை அவர்கள் கைப்பற்றிய போது அங்கவாழ்ந்த மக்களை மனிதாபிமான முறையில் வழி நடத்தினார்கள். கைதுகள் நடை பெறவில்லை. சிறையில் அடைக்கவில்லை. என்ன நடக்குமோ! ஏது நடக்குமோ என்று அஞ்சிக் கொண்டிருந்த மக்காமக்களை மன்னித்தார்கள். அவர்களைக் கொலை செய்யும் உரிமை இருந்தும் அனைவரையும் மன்னித்தார்கள்.

இம்மகத்தான குணம் பல்லாயிரக்கணக்கான மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தில் நுழைய வழிகோலியது. அவர்களுக்கு எதிராக ஆயுதப்பயமுறுத்தல் செய்து இஸ்லாத்தில் நுழைவிக்கவில்லை. மாற்றமாக மன்னிப்பு என்ற மகத்தான குணத்தால் கவரப்பட்ட மக்காவாழ் மக்கள் தாமே இஸ்லாத்தை மார்க்கமாகத் தெரிவு செய்தார்கள்.

ஹி: பதினொன்றில் மரணமாக நபிகள் நாயகம் அவர்களின் போரில் கொல்லப்பட்ட எண்ணிக்கையினர் பற்றி கருத்து தெரிவிக்கின்ற அல்லமா அபுல்ஹஸன் நத்வி (ரஹ்) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்கள்.

ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் இருந்து, ஹிஜ்ரி ஒன்பதாவது நூற்றாண்டுவரை பல போர்களை நபி (ஸல்) அவர்கள் சந்தித்தார்கள், இதில் முஸ்லிம்கள், இறை நிரகாரிப்பாளர்கள் என்ற இரு அணியிலும் மொத்தமாக 1018 பேர்தான் கொலை செய்யப்பட்டார்கள். முஸ்லிம்கள், 259 பேர், எதிரிகள் 759 பேர், 1914 முதல் 1918 வரை நடை பெற்ற போரில் பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரம் 21 மில்லியன் பேர். அப்படியானால் கொலை செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வள தெரியுமா? (7) எழு மில்லியன் பேராகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பாதிக்கப்பட்டடிருந்தவர்களின் எண்ணிக்கை பற்றி (Maxton) என்ற ஜேர்மனிய பாராளுமன்ற அமைச்சர் கணிக்கின்ற போது (50) ஐம்பது மில்லியன் எனக் குறிப்பிட்டுள்ளார். (1)

---

1- ماذا خسر العالم بانحطاط المسلمين لأبي الحسن علي الندوى – (218/1 )

இவ்வாறு பொது மன்னிப்பு வழங்ககப்பட்ட மக்கள் நபிகள் நாயகத்தின் நற்குணத்தால் இஸ்லாத்தில் இணைந்தார்கள். இதற்கு நபிகள் நாயகம் அவர்களின் பொது மன்னிப்பு அவர்களின் இதயங்களில் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணியது. இஸ்லாம் பற்றிய சாதகமான கருத்தோட்டத்தை அம்மக்கள் தம்மில் கண்டார்கள். இதன் விளைவே அவர்களது இஸ்லாமியப் பிரவேசமாகும்.

பல வந்த காலணித்துவ சிந்தனையின் அடிப்படையில் அவர்கள் இஸ்லாத்தை தழுவி இருக்கவில்லை. மாற்றமாக தமது சுய விருப்பின் அடிப்படையில்தான் இஸ்லாத்தை தமது வாழ்வியல் நெறியாக அங்கீகரித்தார்கள். இது இஸ்லாமியப் பரம்பலின் முக்கிய புள்ளியாக விளங்குகின்றது.

நபிகள் நாயகத்தின் மரணத்தின் பின்னால் முஸ்லிம் தலைவர்கள் பலர் தேர்வு செய்யப்பட்டு இஸ்லாமிய ஆட்சி நடத்தினார்கள். அபூபக்கர், உமர், உஸ்மான், அலி, முஆவியா (ரழி) போன்ற நபித்தோழர்கள் இஸ்லாமிய தமது ஆட்சியின் போது பல போர்களை சந்தித்தார்கள். ரோம் பாரஸீகம் போன்ற வல்லரசுகள் கூட அவர்களின் காலத்தில்தான் வெற்றி கொள்ளப்பட்டன.

ரோம், பாரஸீகத்தின் வெற்றி அபூபக்கர் (ரழி) அவர்களின் ஆட்சியில் தொடக்கி வைக்கப்பட்டது. அவ்விரண்டு வல்லரசுகளும், பைஸான்தியர் ஆட்சியும் உமர் பின் கத்தாப் (ரழி) காலத்தில் முழுமைப்படுத்தப்பட்டது. பலஸ்தீன் கூட முஸ்லிம்களின் கைகளில் வந்தது இவரது ஆட்சியில்தான். இருந்தும் அங்கு வாழ்ந்த மக்கள் மத சுதந்திரத்துடன் நடத்தப்பட்டார்கள். இவர்கள் பலாத்காரமாக இஸ்லாத்தில் நுழைவிக்கப்படவில்லை.

**“மேற்கத்திய சிலுவைப் போராளிகள் இஸ்லாமிய உலகின் மீது எட்டு தடவைகள் போர் தொடுத்துள்ளார்கள். அப்போதெல்லாம் அவர்கள் ஒரு கையில் வாழும், மறுகையில் பைபிளுமே சுமந்தே வந்தார்கள்”** (1)

இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற கருத்தோட்டம் இஸ்லாத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட, அதன் வியாபகத்தை பொறுத்துக் கொள்ளாத தீய சக்திகளால் பதினெட்டு, இருபதாம் நூற்றாண்டுகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும். மட்டுமின்றி தார்வினஸத்தைப் போன்று காலாவதியாகிப்போன ஒரு கருத்தாகும். வரும் தொடர்களில் இதற்குப் பதில் தரப்பட்டுள்ளது.

இஸ்லாம் பால்கன், மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் பரவியமைக்கான காரணிகள் காரணிகள் அம்மக்கள் தமக்குத் தேடிக்கொண்ட விடுதலையாகும். தமது தவைர்களால் மந்தைகளா நடத்தப்பட்டதன் விளைவு அவர்களை இஸ்லாம் பற்றி சிந்திக்கத்தூண்டியது. இஸ்லாம் மேற்கில் குறிப்பாக ஐரோப்பாவில் இன்று அசுர வேகத்தில் பெண்கள், சிறுவர், வாலிபர் மத்தியில் பரவுவதற்கான பிரதான காரணிகள் உளவியல் சார்ந்த காரணிகளாக இனம் காணப்படுகின்றது.

அப்போதை மக்களின் வருகைக்குப் பல காரணிகள் கூறப்படுகின்றன. அவை பற்றி வரும் தொடரில் விரிவாகக் காண்போம்.

------------------------------

1- : التغريب

# ஐரோப்பாவில் இஸ்லாம் பரவிய வரலாறு

**இஸ்லாம், ஐரோப்பியக் கண்டத்தின் வாயில்களை கிழக்குப் பிராந்திய பகுதிவழியாகவே தட்டியது. உமைய்யா ஆட்சியாளரான முஆவியா பின் அபீ சுஃப்யான் (ரழி) அவர்களின் ஆட்சி முதல் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.**

**இருந்தும் கொஸ்தான்தீனியாவின் வெற்றியை உஸ்மானியப் பேரரசின் ஆட்சியாளரான முஹம்மத் அல்ஃபாதிஹ் (ஹி: 857- கி.பி. 1453) அவர்கள் தனது ஆட்சியில் பூரணப்படுத்தினார்கள். இது இஸ்லாமியத் தலைவர்கள் பலரின் ஆசையாக இருந்ததற்கு பின்வரும் நபிமொழிதான் அதன் உந்து சக்தியாக மாறியது.**

لَتُفْتَحَنَّ الْقُسْطَنْطِينِيَّةُ فَلَنِعْمَ الْأَمِيرُ أَمِيرُهَا وَلَنِعْمَ الْجَيْشُ ذَلِكَ الْجَيْشُ (1)

கொஸ்தான்தி நோபில் வெற்றி கொள்ளப்படுவது நிச்சயம். அப்போதய அதன் தலைவர், சிறந்த தலைவராக இருப்பதோடு, அந்தப் படை சிறந்த படையாகவும் இருக்கும் (1) இதுதான் அந்நகர வெற்றி பற்றிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்தியாகும்.

**கொஸ்தான்தி நோபிளை வெற்றி கொள்வோர் சிறந்தவர்கள் என கூறப்பதில் பல உண்மைகள் இருக்கின்றன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.**

முஹம்மத் அல்ஃபாதிஹ் மற்றும் அவரது படையினர் ஆகியோர் அந்நகரைக் கைப்பற்றிய பின்னால் நடந்து கொண்ட நடைமுறை பற்றிப் படிக்கின்ற போது அவரை அந்நகர மக்கள் இன்முகத்துடன் ஏற்றுள்ளதையே வரலாற்றில் பார்க்க முடிகின்றது. அதுவும் மேற்கத்தய ஆய்வாரள்களின் வாக்கு மூலத்தில் இது பதிவு செய்யப்பட்டிருப்பது மிகப் பெரிய சான்றாகும்.

மேற்கத்தய ஆய்வார்களில் ஒருவரான **தோமஸ் அர்னோல்ட்** என்பவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார். "….. முஹம்மத் அல்ஃபாதிஹ் கொஸ்தான்தி நோபிளைக் கைப்பற்றி, சட்ட ஒழுங்குகளை அதில் நிறுவியதும் அவர் பின்வரும் அமசங்கள் முதன்மைப் பணியாக இருந்தன:

1- தானே கிரேக்கதின் மத ஆலயங்களைப் பாதுகாப்பதாக அறிவித்தார்,
2- கிரஸ்தவர்களை இம்சிப்பது முழுமையாக (ஹராமாக்கப்பட்டதாகும்). தடுக்கப்பட்டதாகும்.
3- கிரிஸ்தவர்களின் புதிய தலவர், மற்றும் அவரது சிஷியர்கள் ஆகியோர் தாம் ஆரம்பத்தில் அனுபவித்த சகலவிதமான சலுகைகளையும் அனுபவிக்க அனுமதிக்கின்ற அரச வர்த்தமான முறையிலான அறிவித்தல் வெளியிட்டரரம
4- துர்கிய கலீஃபாவிடம் இருந்து தனது பதிவியை குறிக்கும் மரபு ரீதியிலான கைத்தடியைப் பெற்றுக் கொண்ட முதலாம் "ஜன்னாடோஸ்" அவர்கள் சுல்தானிடம் இருந்து ஒரு பையையும் பெற்றுக் கொண்டார். அதில் ஆயிரம் தங்க டோக்கா நாணயம் இருந்து. (2)

------------------------------

1- (مسند أحمد رقم الحديث/ 18189 )

2- **ஷவ்கி அபூ கலீல்- அல்இஸ்லாம் ஃபி கஃப்ஸில் இத்திஹாம். (ப: 101)**

உண்மையில் முஸ்லிம் ஆட்சியாளர்கள் வழங்கிய தாராள மத சுதந்தரிம்தான் கிரிஸ்தவ சமயத்தவர் மத்தியில் தமது செல்வாக்கினை மேலோங்கச் செய்வதற்குரிய பாரிய தாக்கத்தை உண்டுபண்ணியது. அத்துடன் இஸ்பைனை வெற்றி கொண்ட முஸ்லிம் படை வீரர்கள் காட்டிய கருணையும், பரிவும் கிரஸ்தவ சபையின் பாரிய வரிக்காள்கைக்கு மாற்றமான முஸ்லிம் சாதாரண வரிகொள்கையும் இதற்கு வலுச் சேர்த்த அம்சங்கள் என டோஸி குறிப்பிட்டுள்ளதை அர்னோல்ட் தனது நூலில் குறிப்பிடத் தவறவில்லை (1)

கிரிஸ்தவர்கள் தமது மத அனுஷ்டானங்களை நிறைவேற்றிட முஸ்லிம்கள் எவ்வித தொந்தரவும் செய்யவில்லை என்பது மற்றொருவரின் கருத்தாகும் (2)

பல்கனியப் பிரதேசங்களில் அமைந்துள்ள நாடுகள் அனைத்தும் கிரிஸ்தவத்தின் பிடியில் இருந்து தம்மை எப்போது விடுவித்துக் கொள்வது என அங்கலாய்த்துக் கொண்டிருந்த போது அவர்களின் பாதுகாப்பு அரணாக இஸ்லாமியப் படைகளின் படை எடுப்பைக் கருதினர். அதற்காகவே பெரும்பாலானோர் இஸ்லாத்திலும் இணைந்தனர். இதுதான் சரித்திரங்கள் தரும் உண்மைச் செய்திகளாகும்.

**இஸ்லாத்தில் இணைந்த மக்களில் சாதாரண தரத்தை உடையவர்கள் மாத்திரம் இருக்கவில்லை. மாற்றமாக, வசதி படைத்தவர்கள், உயர் பதவியில் உள்ளோர் என பல்வேறுபட்ட குழுக்களில் உள்ளவர்களும், வர்க்கத்தினரும் இருந்தனர் (3)**

இஸ்லாம் ஐரோப்பாவிற்கு என்றும் துரோகம் செய்யவில்லை. மாற்றமாக இஸ்லாத்தின் பிரவேசத்துடன் ஐரோப்பா புத்தெழுச்சி பெற்றது. ஐரோப்பியர் மீது படர்ந்திருந்த அறியாமையின் இருள் அகற்றப்பட்டு புதிய மனிதப்பிறவிகளை இஸ்லாம் ஐரோப்பாவிற்கு நன்கொடையாக வழங்கியது. இதை மறுத்துரைக்கும் ஐரோப்பியர் அதிகம் இருப்பினும் இஸ்லாத்தின் இந்த உயர் சேவையைப் பாராட்டிப் பக்கம் பக்கமாக எழுதிய நடுநிலை தவறாத மேற்கத்தைய ஆய்வார்கள் பலர் இருந்துள்ளனர்.

"அறிவு, **கலாசாரம், பண்பாடு என அனைத்திலும் ஐரோப்பியக் கண்டத்தில் முன்னேற்றம் காணப்பட்டது. அரசியல் தொடர்பு காரணமாக ஐரோப்பியாவுடனான தொடர்பு முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. முஸ்லிம்கள் ஐரோப்பாவை வெற்றி கொண்டதன் பின்னணி இதற்கு இன்னும் வலுச் சேர்த்தது எனக் கூறமுடியும். (4)**

**ஷஐரோப்பாவின் வெற்றி மார்க்கத்தை புகுத்தியதாக இருக்கவில்லை. மாற்றறமாக மனித விடுதலையை இலக்காகக் கொண்டிருந்தது என்பதுதான் உண்மை.**

------------------------

1- **ஷவ்கி அபூ கலீல்- அல்இஸ்லாம் ∴பி க.∴ப்ஸில் இத்திஹாம். (ப: 100)**

2- **அ. நூ.**

3- **அ.நூ. ப: 102**

**3-** قصة ا لإسلام في أوروبا للكتور/ راغب السرجاني –موقع قصة الإسلام

# ஐரோப்பா வெற்றி கொள்ளப்படுதல்



பத்து மில்லியன் சதுர கி.மீ. அளவில் அமைந்த கண்டமாகக் கணிக்கப்படும் ஐரோப்பா உலகிலுள்ள ஆறு கண்டங்களின் வரிசையில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. இதற்கு அடுத்தாக அவ்ஸ்ட்ரேலியா விளங்குகின்றது. இது எதிர்காலத்தில் வெற்றி கொள்ளப்படும் என்ற நபி ((ஸல்) அவர்களால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட செய்திக்குரியவராக தான் இருக்க வேண்டும் என முஸ்லிம் ஆட்சியாளர்கள் ஆசை காட்டினார்கள். அதனால் அதற்கான வெற்றிக்கான முஸ்தீபு நடவடிக்கை தொன்மைக் காலம் தொட்டே தொடங்கி விட்டது. ஒழுங்கற்ற தோற்ற அமைப்பிலான பல தீவுக் கூட்டங்களைக் கொண்டதுதான் ஐரோப்பா என்பார்கள்

ஐரோப்பாவின் கிழக்குத் திசை வழியாக இஸ்லாமியப் பிரவேசம் இருந்தது. தாரிக் பின் ஸியாத் என்ற தளபதி மூலம் (ஹி: 91- கி.பி. 710) அந்தலுஸ்- இஸ்பைன்- மேற்குப் பகுதியாக வெற்றி கொள்ளப்பட்டது. இஸ்பைனையும், பிரான்ஸையும் பிரிக்கும் கோடாக விளங்கும் பேர்னியா Albernier என்ற மலைகளைக் கடந்து பிரான்ஸை முஸ்லிம்கள் வெற்றி கொள்ள அந்தலூஸியா ஊடாக ஊடறுத்துச் சென்றனர். அவர்கள் **வடக்கால்** புவாதிய்யா (Poitiers) என்ற பிரான்ஸிய நகரத்தின் பக்கம் முன்னேறிச் சென்றனர். அதன் சுற்றுப்புற எல்லைகளில் பாரிய போர் மூண்டது. (இது ஹி: 114- கி.பி. 723) நடை பெற்றதாக வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்போரில் முஸ்லிம் படைகள் பாரிய தோல்வி அடைந்தன. அதுவே வலாற்றில் ம.ஃரகத் பிலாதுஷ்ஷுஹதா என்றழைக்கப்படுகின்றது. இத்தோடு, ஐரோப்பாவிற்குள் முஸ்லிம் படைகளின் ஊடுருவல் சற்று ஸ்தம்பித்தது.

தோனிய ஆட்சியாளர்களான அகாலிபாக்கள் ஐரோப்பாவின் தென் பகுதியை வெற்றி கொண்டனர். சர்தீனா தீவை (ஹி: 95- கி.பி. 810) ல் வெற்றி கொண்ட பின்னர் இது சாத்தியமானது. முஸ்லிம் கடல்படைத்தளபதியான அஸத் பின் அல்.ஃபுராத் என்பர் ஐரோப்பாவின் தென்நுழைவாயிலாகக் கணிக்கப்படும் சிசிலித்தீவினை வெற்றி (கி.பி 827-ல்) கொண்டார்.

இத்தாலியத்தீவுகளுக்கிடையில் காணப்பட்ட உட்பூசல்கள் காரணமாக முஸ்லிம்களிடம் உதவிகோரியதன் பயனாக அவற்றின் கரையோரப் பகுதிகள் மீது ஆக்கிரிமிக்கும் சந்தர்ப்பத்தை முஸ்லிம்கள் பெற்றனர்.

ரோம் நகரை முஸ்லிம்கள் அச்சுறத்ததிய பின்னர் எட்டாம் யோவான் கி.பி 872-ல் முஸ்லிம்களுக்கு ஜிஸ்யாவை செலுத்த நிற்பந்திக்கப்பட்டார். இந்த சிசலித் தீவு வட ஆபிரிக்காவையும், ஐரோப்பாவையும் பிரிக்கும் பிரிகோடாக (ஹம்ஸதுல் வஸ்ல் ஆக) இருந்தது. ஐரோப்பியர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் முக்கிய பண்பாட்டு நகரமாக விளங்கியது.

தொலைடோ நகர் மேற்கு ஐரோப்பாவில் அறிவுச் சுடர் பரப்பும் நகராக விளங்கியது. இஸ்பைனியர் அந்நகரை கி.பி.1085-ல் கைப்பற்றிய பின்னரும் நான்கு நூற்றாண்டுகள் அறிவின் சிகரமாகவும், மாணவர்கள் வந்து தங்கிப் படிக்கும் கலா நிலையமாகவும் விளங்கிற்து.

ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியாக வெற்றி கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் உமைய்யாக்களின் காலம் முதல் தொடங்கப்பட்டிருப்பினும், கி.பி ஹி: 857- கி.பி: 1453 இந்நகரம் துர்கிய கலீ.ஃ.ஃபாவினால் வெற்றி கொள்ளப்பட்டது. அதன் பெயர் -இஸ்லாம் பூல்- இஸ்லாமிய

நகரம் எனப் பெயர் சூட்டப்பட்டது. பின்னர் அது இஸ்தான்பூல் என திரிபடைந்தது. கி.பி 1924ல் உஸ்மானிய கிலா.ஃ.பத் வீழ்த்தப்படும்வரை துர்கியரின் ஆட்சித்தலை நகராக அது விளங்கியது.

அவ்வாறே ஐரோப்பாவின் மத்திய பகுதியை வெற்றி கொண்டதும் உஸ்மானியர்களையே சேரும். பால்கனியப் பிரதேசம் ஹி: 756-கி.பி. 1355ல் வெற்றி கொள்ளப்பட்டது. இதன் பின் ஐரோப்பிய நகரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பல்கேரியா (ஹி:774-கி.பி1372)ல் வெற்றி கொள்ளப்பட்டது. சர்பிய நகரங்கள் (ஹி: 788- கி.பி.1387)ல் வெற்றி கொள்ளப்பட்டது. பொஸ்னியா மற்றும் ஹெர்சங்கோவினா (ஹி: 792- கி.பி. 1389)ல் வெற்றி கொள்ளப்பட்டது. அவ்வாறே, குரோஷியன் மற்றும் அல்பேனியா, ஹங்கேரி போன்ற நாடுகளும் வெற்றி கொள்ளப்பட்டது. கி.பி. 1529 ஆகின்ற போது உஸ்மானியப் படைகள் வியன்னாவின் சுவர்கள்- எல்லைகள்- வரையும் சென்றடைந்தது. இருந்தும் அது வெற்றி கொள்ளப்படவில்லை. நூற்றி ஐம்பது ஆண்டுகள் கழிந்த பின் சுல்தான் நான்காம் முஹம்மதின் ஆட்சியில் கி.பி 1683ல்- அது வெற்றி கொள்ளப்பட்டது. இவைகள் அனைத்தும் உஸ்மானியர் ஆட்சியின் கீழ் கி.பி 1918 வரை இருந்தது. 1918ன் பின்னர் இஸ்தான்பூல் நகரைத் தவிர ஏனெய நகரங்கள் அனைத்தும் உஸ்மானியர் ஆட்சியில் இருந்து பறிபோனது.

இங்கு இஸ்லாத்தில் இணைந்த மக்கள் யாரும் பலாத் காரம் பிரயோகிக்கப்பட்டு அதில் பிரவேசிக்கவில்லை. மாற்றமாக முஸ்லிம்களின் நடைமுறை, நீதி நிருவாகம், ஏழை செல்வந்தர் என்ற பாகுபடற்ற சமத்துவம் போன்ற பண்பாடுகளின் கவர்ச்சி காரணமாகவே நுழைந்தார்கள். உஸ்மானியப் பேரரசில் இவர்களுக்கு வழங்கப்பட்ட உயரிய சமூக அந்தஸ்தும் அதற்குக் காரணமாக அமைந்தன. இது ஐரோப்பிய சமூகத்தில் இழந்து போன சொத்தாகும். அவர்கள் மத்தியில் காணப்பட்ட தொடர் குழப்பங்கள் அம்மக்களை விரக்தியில் ஆழ்த்தியதுடன், உஸ்மானியர் ஆட்சியில் காணப்பட்ட சீரான நிருவாக முறையும் ஒரு உந்துதல் காரணியாக விளங்கியது.

முஸ்லிம் படைகள் ஐரோப்பாவை வெற்றி கொண்ட பின்னர் யூத, கிரிஸ்த மக்களை இஸ்லாத்தை தழுவும்படி வற்புறுத்தியது கிடையாது. மாற்றமாக அவர்களுக்குத் தர வேண்டிய அனைத்து விதமான மத உரிமைகளையும் மத சுதந்திரமும் கொடுத்து வாழ வைத்தனர்.

ஆனால் இஸ்பைனியக் கிரிஸ்தவர்கள் 1492ல் இஸ்பைனை மீட்டெடுத்த பின் நடத்திய கொடுமைகள், பலஸ்தீனில் சிலுவைப் போரிகள் அரங்கேற்றிய கொடூரக் கொலைகள், தாத்தாரியர் பக்தாதைக் கைப்பற்றிய பின்னர் ஓடச் செய்த இரத்த ஆறுகள் என்பன வரலாற்றில் மாறாத வடுக்களாகும். மேற்கின் ஆய்வாள்களின் கண்களில் இவை தென்படுதில்லை. கண்டும் காணா குருடர்களாகவே இன்றும் செயல்படுகின்றனர். இருந்தும் விதிவிலக்காக ஒரு சிலர் உண்மையையும் நியாயத்தையும் உலகிற்குக் கூறினார்கள். அதுவும் மேற்கின் செவிப்பாறைகளை சென்றடைந்தும் பயனற்குப் போனது. (1)

-----------------------------------

1- قصة ا لإسلام في أوروبا للكتور/ راغب السرجاني –موقع قصة الإسلام

ولم يرغموا – أي الأتراك– أحدا على ترك دينه (1)

**“துர்கிய ஆட்சியாளர்களான அவர்கள் யாரையும் இஸ்லாத்தில் நுழையும்படி பலாத்காரம் பிரயோகிக்கவில்லை” என தோமஸ் அர்னோல்ட் குறிப்பிடுகின்றார். (2)**

وظهر الفتح الإسلامي كمخلص للشعب من حكم الساسانيين وذلك باعتراف "كايتاني" (2)

காய்டானி என்ற மேற்கத்தய ஆய்வாளரின் கருத்துப்படி “இஸ்லாமிய வெற்றியானது (பாரஸீகத்தில்) சாசானியரின் அநீதியான ஆட்சியில் இருந்து மக்களை விடுதலை செய்வதே நோக்கமாக இருந்தது. (2)

இஸ்லாத்தை மக்கள் இன்முகத்துடன் வரவேற்றது மட்டுமின்றி, முஸ்லிம் படைகளின் வரவை எதிர்பார்த்தும் இருந்தனர் என்றும் வரலாற்றில் காண முடிகின்றது. இஸ்லாம் ஐரோப்பாவிற்கு வாள்முனையில் பரப்பப்பட்டிருக்குமாயின், அல்லது முஸ்லிம் மன்னர்கள் கொடுங்கோலர்களாகவும், முஸ்லிம் படைகள் அநீதியாளர்களாகவும் இஸ்லாத்தில் மக்கள் இவ்வளவு வேகமாக வந்திருக்கவே முடியாது.

மட்டுமின்றி, இன்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மக்டோனியா, அல்பேனியா, கோஸோவா? போன்ற நாடுகள் 99 வீதம் முஸ்லிம்களைக் கொண்டதாக விளங்குகின்றது. அது எப்படிச் சாத்தியாமனது. பலாத் காரம் பிரயோகிக்கப்பட்டிருக்குமானால் இவ்வளவு காலம் வரை ஏன் இஸ்லாத்தில் அவர்கள் வாழ்கின்றார்கள் ? என சிந்திக்க வேண்டும்.

இந்தப் பின்னணியில் முஸ்லிம் படை எடுப்புக்கள் பற்றி ஆய்வை அணுகுவது பொருத்தமானதாகக் காண்கின்றே

-------------------------

**1- ஷவ்கி அபூ கலீல்- அல்இஸ்லாம் ஃபி கஃப்ஸில் இத்திஹாம். (ப: 102)**

**2- அ.நூ. (ப: 103)**

# சிறுபான்மை மதத்தவரான திம்மிக்களும் உரிமைகளும்

இவர்கள், இஸ்லாமிய ஆட்சியின் கீழ்வாழ்ந்த மக்களாகும். நபிகள் நாயகத்தின் காலம் முதல் முஸ்லிம்களின் ஆட்சி வரை வாழ்ந்த இம்மக்கள் மிகவும் கண்ணியமாக நடத்தப்பட்டார்கள் என்பதைப் பின்வரும் வரலாற்றுப் பதிவுகள் மூலம் அறிய முடிகின்றது.

## முஸ்லிம் அரசுகள் வழங்கிய மத சுதந்திரம்

முஸ்லிம் அரசுகள் தமது ஆட்சியின் கீழ் வாழ்ந்த சிறுபான்மையினருக்கு வழங்கிய உரிமைகள், அவர்களுடன் அவை நடந்து கொண்ட தாராளத்தன்மைகள் பற்றிய செய்தியை இஸ்லாமிய நூல்களில் இருந்து மேற்கோள்காட்டுவதை விட மாற்றுமதத்தவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதே சாலச் சிறந்தாகும். அதனால், அவர்கள் சிலரது வாக்கு மூலம் பற்றி இங்கு தப்படுகின்றது.

சேர். அர்னோலட் . இவர் ஒரு கிரிஸ்தவர் الدعوة إلى الإسلام என்ற தலைப்பில் ஒரு நூலை யாத்துள்ளார். இதனை, حسن إبراهيم حسن وعبد المجيد عابدين وإسماعيل النحراوي என்ற அறிஞர்கள் குழு மொழியாக்கம் செய்துள்ளது. அதில் 48 பக்கத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

" ويمكننا أن نحكم من الصِّلات الودية التي قامت بين المسيحيين والمسلمين من العرب بأن القوة لم تكن عاملاً حاسماً في تحويل الناس إلى الإسلام. فمُحَمد نفسه قد عقد حلفاً مع بعض القبائل المسيحية، وأخذ على عاتقه حمايتهم ومنحهم الحرية في إقامة شعائرهم الدينية. كما أتاح لرجال الكنيسة أن ينعموا بحقوقهم ونفوذهم القديم في أمن وطمأنينة ".

கிரிஸ்தவர்களுக்கும் அரேபிய முஸ்லிம்களுக்கும் இடையில் உருவான பாசப்பிணைப்பு என்பது அதிகாரத்தின் மூலமான பிணைப்பைக் கொண்டு மக்கள் இஸ்லாத்தின் பக்கம் மாற்றப்படவில்லை என்பதை நாம் கூற முடியும். முஹம்மத் கிரிஸ்தவக் கோத்திரங்களுடன் நட்பை ஏற்படுத்தி இருந்தார். அவர்களின் பாதுகாப்பை தனது தோழின் மீது சுமந்து கொண்டார். அவர்கள் தமது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்ற அவர்களுக்கு மத சுதந்திரம் வழங்கினார். அவ்வாறே, கிரிஸ்தவ மதகுருக்கள் தமது உரிமைகளுடனும், அதிகாரத்துடனும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் நடமாட வழிவகை செய்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகின்ற போது:

ويقول في صفحة 51: " ومن هذه الأمثلة التي قدمناها آنفاً عن ذلك التسامح الذي بسطه المسلمون الظافرون على العرب المسيحيين في القرن الأول من الهجرة، واستمر في الأجيال المتعاقبة، نستطيع أن نستخلص بحق أن هذه القبائل المسيحية التي اعتنقت الإسلام، إنما فعلت ذلك عن اختيار وإرادة حرة. وإن العرب المسيحيين الذين يعيشون في وقتنا هذا بين جماعات مسلمة لشاهد على هذا التسامح ".

அரபு முஸ்லிம்கள் ஹிஜ்ரி முதலாம் ஆண்டு கிரிஸ்வர்களுக்கெதிராக பெற்ற தமது வெற்றிச் செல்வாக்கு மதசகிப்புத்தன்மையோடு பின்வந்த சந்ததிகளிலும் தொடர்ந்தது என்பது பற்றி நாம் முன்னர் எடுத்துக்காட்டிய உதாரணங்கள் மூலம் கிரிஸ்தவக் கோத்திரங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமை அவர்களின் சுயமான முடிவின் பேரிலும், சுதந்திரமாகவுமே இருந்தது. தற்காலத்தில் முஸ்லிம் அமைப்பினர் மத்தியில் வாழ்கின்ற அரபு கிரிஸ்தவர்கள் இந்த மத சகிப்புத்தன்மைக்கோர் சாட்சியான எடுத்துக் காட்டாகும்.

அவர் அதில் 53வது பக்கத்தில்:

ويقول في صفحة 53: " ولما بلغ الجيش الإسلامي وادي الأردن، وعسكر أبو عبيدة في فحل، كتب الأهالي المسيحيون في هذه البلاد إلى العرب يقولون: (1)

ஜோர்தானின் பள்ளத்தாக்கை இஸ்லாமியப் படை சென்றடைந்து அதன் தளபதியான அபூஉபைதா பஹ்ல் என்ற பிரதேசத்தில் முகாமிட்ட போது அப்பிரதேசத்தில் வாழ்ந்த கிரஸ்தவ சமய மக்கள் அரபு முஸ்லிம்களுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்கள்.

يا معشر المسلمين أنتم أحب إلينا من الروم، وإن كانوا على ديننا. أنتم أوفى لنا وأرأف بنا وأكف عن ظلمنا وأحسن ولاية علينا "

முஸ்லிம்களே! நீங்கள் ரோமர்களை விட எமக்கு நேசத்திற்குரியவர்கள். அவர்கள் எமது சமயம் சார்தோராக இருந்த போதிலும் சரியே! நீங்களே எமக்கு அனைத்தையும் நிறைவேற்றித்தருபவர்கள், நீங்கள்தாம் எம்முடன் பாசமானவர்களும், எமக்கு எதிராக வரும் அநீதி தடுத்து நிறுத்துபவர்களும், எம்மை ஆட்சி செய்ய சிறந்தவர்களும் . (1) இவ்வாறு அவர்கள் தமது வாக்கு மூலத்தை உலகுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

சுத் (2) الزط என்ற இனத்தவரின் சாட்சியமும் மற்றொரு வரலாற்றுச் சான்றாகும். பாரஸீக மன்னர் ஹுர்முஸானின் ஆட்சியில் கடுமையாக வதைக்கப்பட்ட இவர்கள் பிற்காலத்தில் இஸ்லாத்தில் இணைகின்றார்கள்.

உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களின் காலத்தில் இந்திய இனமான **அஸாவிரா, ஸயாபிஜா,** பாரஸீகத்தில் தங்கி இருந்து சுத் இனம் ஆகிய இந்திய ***சுத்*** இன மக்கள் அதிகமாக அபூமூஸா அல்அஷ்அரிய்யி (ரழி) அவர்களிடம் இஸ்லாத்தை தழுவினார்கள். இது வர்கள் ஹிஜ்ரி: 16 (கி.பி.638) **துஸ்துர்** என்ற பாரஸீக மாகாணத்தை முற்றுகையிட்டிருந்த போது நடந்துள்ளது. அஹ்வாஸ் மாகாணத்தில் இராணுவ பலமான இராணுவமாகக் காணப்பட்ட அஸாவிராக்கள் இனப்படையினர் இஸ்லாம் வளர்வதைக் கண்டு முஸ்லிம்களை எதிரப்பதில் பயனில்லை என்ற முடிவிற்கு வந்தார்கள்.

சோஸ் நகரம் அபூ மூஸா (ரழி) அவர்களின் தலைமயில் வெற்றி கொள்ளப்பட்டுவிட்டது. இந்நிலையில், பத்துப்பேர்கள் கொண்டு குழுவினரை பின்வரும் உடன்படிக்கையின் அடிப்படையில் அபூமூஸா (ரழி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அதில் அவர்கள் இஸ்லாத்தில் முழுமையாக இணைதல், அரேபியரின் பகைமை எதிரிகளுக்கு எதிராக அரபுக்களின் அணியில் இருந்து போராடுதல், போர்க் கொடுப்பனவில் தம்மை இணைத்துக் கொள்ளல், அவர்கள் விரும்புகின்ற அரபுக்கோத்திரத்துடன் இணைவதற்கான முழு அங்கீகாரம் போன்ற இன்னோரென்ன அம்சங்கள் உள்ளடங்கப்பட்டடிருந்தன. (3)

------------------------

1- محمد قطب، شبهات حول الإسلام - (1 / 174)

2- الزط بضم الزاي وتشديد الطاء هو تعريب للكلمة الفارسية جت Jat أو . Jets وقد أتفق المؤرخون والجغرافيون واللغويون على أصلهم من بلاد الهند إلى بلاد فارس والعراق لغلاء وقع هناك ساق وراءه الفقر والفاقة) (الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 /3 )

3- الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 / 21)

முஸ்லிம் தளபதியான அபூமூஸா அல்அஷஅரிய்யி (ரழி) அவர்கள் இல்லை எமக்குள்ள உரிமை எதுவோ அவை  உங்களுக்கும் உண்டு. உங்களுக்கு எது இருக்கின்றதோ அதுவும் நமக்குண்டு எனக் கூறிவிட்டு உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களுக்கு கடிதம் எழுதி விபரம் கேட்டபோது. அவர்கள் விடுக்கின்ற கோரிக்கை நிறைவேற்றுங்கள். இது இராணுவத்திற்கு ஒரு பலத்தை தேடித்தரும் என்ற கருத்தில் மறுமொழி அனுப்பி இருந்தார்கள். இதை அபூமூஸா அல்அஷஅரிய்யி (ரழி) அவர்கள் ஸுத் மக்களுக்கு தெரியப்படுத்திய போது இஸ்லாத்தில் இணைந்து **துஸ்துர்** மாகாண முற்றுகையிலும் அம்மக்கள் கலந்து கொண்டதாக இஸ்லாமிய வரலாறு குறிப்பிடுகின்றது. (1)

போர் வீரர் ஸலாஹுத்தீன் அவர்களின் பண்பாடும், அவரது வாழ்வியலில் பொதிந்திருந்த வீரமும் அக்கால கிரிஸ்தவர்கள் மனதில் அவர் பற்றிய விஷேடமானதொரு மறைமுகமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. எந்தளவுக் கெனில், அவர் மேல் காணப்பட்ட ஈர்ப்பினால் தமது கிரிஸ்தவ மதத்தையும் வெறுத்து தமது படையணியில் இருந்து வெளியேறி முஸ்லிம் படைகளுடன் இணைந்து கொண்டனர். அவ்வாறே,  கிரிஸ்தவ மதப் போதகரான (( روبرت أوف سانت ألبانس )) Robert of St. Albans என்பவர் ஒரு ஆங்கிலயர், குதிரை வீரர். இவர் கி.பி. 1185ல் இஸ்லாத்தை ஏற்றக் கொண்டார். அதன் பின்னர், ஸலாஹுத்தீன் அவர்களின் பேத்திமார்களில் ஒருவரை திருமணம் முடித்தார். இது நடந்து இரண்டு ஆண்டுகள் கழித்த பின்னர், பலஸ்தீன் மீது ஸலாஹுத்தீன் அவர்கள் போர் தொடுத்து, கிரிஸ்தவப்படையை ஹித்தீன் எனும் இடத்தில் வரலாறு பேசும் அளவு பயங்கமாகத் தோல்வியுறச் செய்தார். جويGuy என்ற பலஸ்தீன் மன்னன் கைதிகளுள் காணப்பட்டான். மாலைப் பொழுதில் தனது அந்தக்காவல் படைவீரர்களை விட்டுவிட்டு ஸலாஹுத்தீன் அவர்களின் முகாமை நோக்கி தப்பி ஓடினார். என இந்தியத் துணைக்கண்டத்தின் அறிஞர்களில் ஒருவரான அல்லாமா அபுல் ஹஸன் நத்வி என்பவர் குறிப்பிடுகின்றார். (2)

முஸ்லிம்கள் இரத்ததாகம் கொண்டவர்களாக இருந்திருப்பின் இவ்வாறான நிகழ்வுகள், அதுவும் போர்களத்தில்  நடை பெற்றிருக்க முடியுமா? என சிந்திக்க வேண்டும்.

---

(1) الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 / 21)
(2) ماذا خسر العالم بانحطاط المسلمين - (1 / 11)

## இஸ்லாமிய ஆட்சியின் கீழ்வாழ்ந்த சிறுபான்மை மதத்தவரின் பன்முக நிலை

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் மக்களை معاهد -முஆஹத்- ஒப்பந்தம் செய்யப்பட்டவர், ஒப்பந்த அடிப்படையில் இஸ்லாமிய ஆட்சியில் வாழ்பவர் என்ற பொருள் கொண்டு அழைக்கப்படுகின்றனர்.

இவர்களை أهل الذمة – முஸ்லிம் அரசால் பொறுப்புக் கூறப்படவேண்டியவர்கள்- என்றும் அழைக்கப்படுகின்றது. இஸ்லாமிய அரசின் பொறுப்பின் கீழ் பாது காப்பு வழங்கப்பட்டு வாழ்வதனால் இந்தப் பெயர் கொண்டு அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

قال ابن الأثير : "وسمي أهل الذمة لدخولهم في عهد المسلمين وأمانهم" (1)

முஸ்லிம்களின் ஒப்பந்தத்தின் கீழும், அவர்களின் பாதுகாப்பின் கீழும் இவர்கள் வாழ்வதனால் இவர்கள் **அஹ்லுத்திம்மா** என அழைக்கப்படுகின்றனர் அல்லாமா இப்னுல் அஸீத் என்பவர் குறிப்பிடுகின்றார். (1)

**أهل العَهْد والأمَانِ والضَّمان والحُرمَة والحقِّஆகிய சொற்பிரயோகங்கள் மூலம் திம்மிக்கள் பற்றிய பதிவுகள் குறிப்பிடுகின்றன.**

இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழ்ந்த முஸ்லிம் அல்லாத மக்களின் பாதுகாப்பிற்காகவே **ஜிஸ்யா** வரி அறவிடப்பட்டது. அவர்களின் விருப்பத்தின் பேரில் சேகரிக்கப்பட்ட அந்த நிதி அவர்களின் பாதுகாப்பு நலனுக்காவே செலவும் செய்யப்பட்டது. நோயாளிகள், சிறுவர்கள், வயோதிபர்கள் போன்றோரிடம் இருந்து அது சேமிக்கப்பட்டவில்லை.

இது சாதாரணமான விஷயமாக இஸ்லாம் நோக்கவில்லை. இஸ்லாமிய அரசினதும், முஸ்லிம்களினதும் பாரிய பொறுப்பாகவும் நோக்குகின்றது. சிறுபான்மையினர், திம்மிக்களுடன் நடந்து கொள்வதில் மோசடி செய்வது பற்றிய நபியின் பின்வரும் எச்சரிக்கையை கவனியுங்கள்.

(திம்மிக்களிடம் இருந்து) தீனார், தரிஹம் (தங்க, வெள்ளி) நாணயங்கள் வராமல் இருந்தால் (பொருளாதார) நிலைமை எவ்வாறு இருக்கும் என அபூஹுரைரா (ரழி) அவர்கள் கூறிய போது , அபூஹுரைராவே! அது எவ்வாறு நடை பெறும் என நினைக்கின்றீர் என மக்கள் கேட்டபோது: அபூஹுரைராவின் ஆத்மா யார் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமிட்டு, உண்மையாளரும், உண்மைப்படுத்தப்பட்டுவருமான நபிகள் நாயகத்தின் கூற்றைக் கொண்டுதான் சொன்னேன் என்றார். அது எப்டி என மக்கள் கேட்க:

قَالُوا عَمَّ ذَاكَ قَالَ تُنْتَهَكُ ذِمَّةُ اللَّهِ وَذِمَّةُ رَسُولِهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ فَيَشُدُّ اللَّهُ عَزَّ وَجَلَّ قُلُوبَ أَهْلِ الذِّمَّةِ فَيَمْنَعُونَ مَا فِي أَيْدِيهِمْ (2)

அல்லாஹ்வுடையவும், அவனது தூதர் உடையதுமான (பெயரில் செய்யபட்ட ஒப்பந்தம்) திம்மிக்கள் விஷயத்தில் மீறப்படும். அஹ்லுத்திம்மா أهل الذمة மக்களின் இதயங்களை அல்லாஹ் இறுக்கமாக்குவான், அதனால் தமது கரங்களில் இருப்பதை –ஜிஸ்யா- கராஜ்- வரிகளை – வழங்காது தடுத்துக் கொள்வார்கள் எனக் கூறினார்கள். (2)

-------------

1- ابن الأثير : النهاية في غريب الأثر – (2 / 421)

2- فتح الباري لابن حجر – (9 / 457 (2) **بَاب إِثْمِ مَنْ قَتَلَ مُعَاهَدًا بِغَيْرِ جُرْمٍ-** رقم الحديث ( 2930) .

முஸ்லிம்களுக்குப் பயன்தரும் ஜிஸ்யாவரிவிசயத்தில் أهل الذمة திம்மிக்களுடன் சரிவர நடந்து கொள்வது பற்றிய நபியின் அறிவுரை பற்றி விளக்குகின்ற இமாம் இப்னு ஹஜர் அவர்கள் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

فيه .... والتَّوْصِيَة بِالْوَفَاءِ لِأَهْلِ الذِّمَّة لِمَا فِي الْجِزْيَة الَّتِي تُؤْخَذ مِنْهُمْ مِنْ نَفْع الْمُسْلِمِينَ ، وَفِيهِ التَّحْذِير مِنْ ظُلْمهمْ وَأَنَّهُ مَتَى وَقَعَ ذَلِكَ نَقَضُوا الْعَهْد فَلَمْ يَجْتَبِ الْمُسْلِمُونَ مِنْهُمْ شَيْئًا فَتَضِيق أَحْوَالهمْ (1)

இதில் முஸ்லிம்களுக்கு பயன் தரும் வகையில் திம்மிக்களிடம் இருந்து பெறப்படும் வரிகளில் வாக்குறுதி பேணி நடப்பது பற்றிய கட்டளை உள்ளடங்கி இருப்பதுடன், அவர்களுக்கு அநீதி இழைப்பது பற்றிய எச்சரிக்கையும் இந்த நபிமொழியில் பொதிந்திருக்கின்றது எனக் குறிப்பிடும் இமாம் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி அவர்கள், இது எப்போது சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்பட்டதோ அப்போதிருந்தே முஸ்லிம்கள் அவர்களிடம் இருந்து எதையும் ஜிஸ்யா வரியாகப் பெறவில்லை, அதனால் அவர்களின் (பொருளாதார) நிலையும் மோசமடைந்தது எனத் தொடரும் இமாம் அவர்கள், ஈராக் பிரதேசத்தில்தான் இந்த முன்னறிவிப்பு முதலாவதாக நடந்தேறியது என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். (1)

அல்லாஹ்வினதும், அவனது தூதரினதும் பொறுப்பைக் கொண்டு திம்மிக்கள் விஷயத்தில் நான் அறிவுரை கூறுகின்றேன், அவர்களின் உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படுவதையும், அவர்களுக்காக போராடுவதையும், அவர்களது சக்திக்கு உட்பட்டே தவிர அவர்களை சிரமப்படுத்துவதும் கூடாது என்றும் வலியுறுத்துகின்றேன் என உமர் (ரழி) அவர்கள் கூறினார்கள். (2)

بَقِيَ عَلَيْهِمْ شَيْءٌ مِنْ الْخَرَاجِ فَقَالَ إِنِّي أَشْهَدُ أَنِّي سَمِعْتُ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ يَقُولُ إِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ يُعَذِّبُ يَوْمَ الْقِيَامَةِ الَّذِينَ يُعَذِّبُونَ النَّاس

ஹிஷாம் பின் ஹகீம் (ரழி) அவர்கள் ***ஷாம்*** தேசத்தில் அஹ்லுத்திம்மா மக்களில் சிலருக்கு அருகாமையால் நடந்து சென்றார், அவர்கள் சூரியனின் கீழ் நிறுத்தப்பட்டடிருப்பதைக் கண்டார், இவர்கள், எதற்காக இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளனர் எனக்கேட்டார். இவர்கள் மீது –கராஜ்- நிலவரியில் பாக்கி இருக்கின்றது என மக்கள் கூறினார்கள். மனிதர்களை வேதனை செய்பவர்களை அல்லாஹ் மறுமையில் வேதனை செய்வான் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றேன் என ஹிஷாம் பின் ஹகீம் (ரழி) அவர்கள் கூறினார்கள் (3)

இவ்வாறு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பேணிய மார்க்கமாக இஸ்லாம் விளங்குகியும் அது பிற சமூகத்தை நிந்திப்பதை, மத நிந்தனை செய்வதை, பிறரின் இரத்தங்களை ஓட்டி, அவர்களைப் பயமுறுத்தியே இஸ்லாத்தில் அவர்களைக் கொண்டுவந்தது என அதன் மீது பழிபோடுவது வேடிக்கையான ஒன்றாகும்.

------------------------------

(1-457 / 9) – فتح الباري لابن حجر (2) **بَاب إِثْمِ مَنْ قَتَلَ مُعَاهَدًا بِغَيْرِ جُرْمٍ** - (2930) رقم الحديث (3). ஸஹீஹுல் புகாரி. 1229. யூதரின் ஜனாஸாவிற்காக எழுந்து நிற்பது.

2- صحيح البخاري : بَاب يُقَاتَلُ عَنْ أَهْلِ الذِّمَّةِ وَلَا يُسْتَرَقُّونَ (**3**) ஆதார நூல் முஸ்னத் அஹ்மத் ஹ. இ: 14790

## சிறுபான்மை மதத்தவரான திம்மிக்களும் உரிமைகளும்

இவர்கள், இஸ்லாமிய ஆட்சியின் கீழ்வாழ்ந்த மக்களாகும். நபிகள் நாயகத்தின் காலம் முதல் முஸ்லிம்களின் ஆட்சி வரை வாழ்ந்த இம்மக்கள் மிகவும் கண்ணியமாக நடத்தப்பட்டார்கள் என்பதைப் பின்வரும் வரலாற்றுப் பதிவுகள் மூலம் அறிய முடிகின்றது.

## முஸ்லிம் அரசுகள் வழங்கிய மத சுதந்திரம்

முஸ்லிம் அரசுகள் தமது ஆட்சியின் கீழ் வாழ்ந்த சிறுபான்மையினருக்கு வழங்கிய உரிமைகள், அவர்களுடன் அவை நடந்து கொண்ட தாராளத்தன்மைகள் பற்றிய செய்தியை இஸ்லாமிய நூல்களில் இருந்து மேற்கோள்காட்டுவதை விட மாற்றுமதத்தவரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்வதே சாலச் சிறந்தாகும். அதனால், அவர்கள் சிலரது வாக்கு மூலம் பற்றி இங்கு தப்படுகின்றது.

சேர். அர்னோலட் . இவர் ஒரு கிரிஸ்தவர் الدعوة إلى الإسلام என்ற தலைப்பில் ஒரு நூலை யாத்துள்ளார். இதனை, حسن إبراهيم حسن وعبد المجيد عابدين وإسماعيل النحراوي என்ற அறிஞர்கள் குழு மொழியாக்கம் செய்துள்ளது. அதில் 48 பக்கத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

" ويمكننا أن نحكم من الصِّلات الودية التي قامت بين المسيحيين والمسلمين من العرب بأن القوة لم تكن عاملاً حاسماً في تحويل الناس إلى الإسلام. فمُحَمد نفسه قد عقد حلفاً مع بعض القبائل المسيحية، وأخذ على عاتقه حمايتهم ومنحهم الحرية في إقامة شعائرهم الدينية. كما أتاح لرجال الكنيسة أن ينعموا بحقوقهم ونفوذهم القديم في أمن وطمأنينة ".

கிரிஸ்தவர்களுக்கும் அரேபிய முஸ்லிம்களுக்கும் இடையில் உருவான பாசப்பிணைப்பு என்பது அதிகாரத்தின் மூலமான பிணைப்பைக் கொண்டு மக்கள் இஸ்லாத்தின் பக்கம் மாற்றப்படவில்லை என்பதை நாம் கூற முடியும். முஹம்மத் கிரிஸ்தவக் கோத்திரங்களுடன் நட்பை ஏற்படுத்தி இருந்தார். அவர்களின் பாதுகாப்பை தனது தோழின் மீது சுமந்து கொண்டார். அவர்கள் தமது சமய அனுஷ்டானங்களை நிறைவேற்ற அவர்களுக்கு மத சுதந்திரம் வழங்கினார். அவ்வாறே, கிரிஸ்தவ மதகுருக்கள் தமது உரிமைகளுடனும், அதிகாரத்துடனும் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் நடமாட வழிவகை செய்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகின்ற போது:

ويقول في صفحة 51: " ومن هذه الأمثلة التي قدمناها آنفاً عن ذلك التسامح الذي بسطه المسلمون الظافرون على العرب المسيحيين في القرن الأول من الهجرة، واستمر في الأجيال المتعاقبة، نستطيع أن نستخلص بحق أن هذه القبائل المسيحية التي اعتنقت الإسلام، إنما فعلت ذلك عن اختيار وإرادة حرة. وإن العرب المسيحيين الذين يعيشون في وقتنا هذا بين جماعات مسلمة لشاهد على هذا التسامح ".

அரபு முஸ்லிம்கள் ஹிஜ்ரி முதலாம் ஆண்டு கிரிஸ்வர்களுக்கெதிராக பெற்ற தமது வெற்றிச் செல்வாக்கு மதசகிப்புத்தன்மையோடு பின்வந்த சந்ததிகளிலும் தொடர்ந்தது என்பது பற்றி நாம் முன்னர் எடுத்துக்காட்டிய உதாரணங்கள் மூலம் கிரிஸ்தவக் கோத்திரங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டமை அவர்களின் சுயமான முடிவின் பேரிலும், சுதந்திரமாகவுமே இருந்தது. தற்காலத்தில் முஸ்லிம் அமைப்பினர் மத்தியில் வாழ்கின்ற அரபு கிரிஸ்தவர்கள் இந்த மத சகிப்புத்தன்மைக்கோர் சாட்சியான எடுத்துக் காட்டாகும்.

அவர் அதில் 53வது பக்கத்தில்:

ويقول في صفحة 53: " ولما بلغ الجيش الإسلامي وادي الأردن، وعسكر أبو عبيدة في فحل، كتب الأهالي المسيحيون في هذه البلاد إلى العرب يقولون: (1)

ஜோர்தானின் பள்ளத்தாக்கை இஸ்லாமியப் படை சென்றடைந்து அதன் தளபதியான அபூஉபைதா பஹ்ல் என்ற பிரதேசத்தில் முகாமிட்ட போது அப்பிரதேசத்தில் வாழ்ந்த கிரஸ்தவ சமய மக்கள் அரபு முஸ்லிம்களுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார்கள்.

يا معشر المسلمين أنتم أحب إلينا من الروم، وإن كانوا على ديننا. أنتم أوفى لنا وأرأف بنا وأكف عن ظلمنا وأحسن ولاية علينا "

முஸ்லிம்களே! நீங்கள் ரோமர்களை விட எமக்கு நேசத்திற்குரியவர்கள். அவர்கள் எமது சமயம் சார்தோராக இருந்த போதிலும் சரியே! நீங்களே எமக்கு அனைத்தையும் நிறைவேற்றித்தருபவர்கள், நீங்கள்தாம் எம்முடன் பாசமானவர்களும், எமக்கு எதிராக வரும் அநீதி தடுத்து நிறுத்துபவர்களும், எம்மை ஆட்சி செய்ய சிறந்தவர்களும் . (1) இவ்வாறு அவர்கள் தமது வாக்கு மூலத்தை உலகுக்கு தெரியப்படுத்தியுள்ளார்கள்.

சுத் (2) الزط என்ற இனத்தவரின் சாட்சியமும் மற்றொரு வரலாற்றுச் சான்றாகும். பாரஸீக மன்னர் ஹுர்முஸானின் ஆட்சியில் கடுமையாக வதைக்கப்பட்ட இவர்கள் பிற்காலத்தில் இஸ்லாத்தில் இணைகின்றார்கள்.

உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களின் காலத்தில் இந்திய இனமான **அஸாவிரா, ஸயாபிஜா,** பாரஸீகத்தில் தங்கி இருந்து சுத் இனம் ஆகிய இந்திய ***சுத்*** இன மக்கள் அதிகமாக அபூமூஸா அல்அஷ்அரிய்யி (ரழி) அவர்களிடம் இஸ்லாத்தை தழுவினார்கள். இது வர்கள் ஹிஜ்ரி: 16 (கி.பி.638) **துஸ்துர்** என்ற பாரஸீக மாகாணத்தை முற்றுகையிட்டிருந்த போது நடந்துள்ளது. அஹ்வாஸ் மாகாணத்தில் இராணுவ பலம் பொருந்திய இனமாகக் காணப்பட்ட அஸாவிராக்கள் இஸ்லாம் வளர்வதைக் கண்டு முஸ்லிம்களை எதிரப்பதில் பயனில்லை என்ற முடிவிற்கு வந்தார்கள். சோஸ் நகரம் அபூ மூஸா (ரழி) அவர்களின் தலைமயில் வெற்றி கொள்ளப்பட்டுவிட்டது. இந்நிலையில், பத்துப்பேர்கள் கொண்டு குழுவினரை பின்வரும் உடன்படிக்கையின் அடிப்படையில் அபூமூஸா (ரழி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அதில் அவர்கள் இஸ்லாத்தில் முழுமையாக இணைதல், அரேபியரின் பகைமை எதிரிகளுக்கு எதிராக அரபுக்களின் அணியில் இருந்து போராடுதல், போர்க் கொடுப்பனவில் தம்மை இணைத்துக் கொள்ளல், அவர்கள் விரும்புகின்ற அரபுக்கோத்திரத்துடன் இணைவதற்கான முழு அங்கீகாரம் போன்ற இன்னோரென்ன அம்சங்கள் உள்ளடங்கப்பட்டடிருந்தன. (3)

------------------------

4- محمد قطب، شبهات حول الإسلام - (1 / 174)

5- الزط بضم الزاي وتشديد الطاء هو تعريب للكلمة الفارسية جت Jat أو . Jets وقد أتفق المؤرخون والجغرافيون واللغويون على أصلهم من بلاد الهند إلى بلاد فارس والعراق لغلاء وقع هناك ساق وراءه الفقر والفاقة) (الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 /3 )

6- الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 / 21)

முஸ்லிம் தளபதியான அபூமூஸா அல்அஷஅரிய்யி (ரழி) அவர்கள் இல்லை எமக்குள்ள உரிமை எதுவோ அவை உங்களுக்கும் உண்டு. உங்களுக்கு எது இருக்கின்றதோ அதுவும் நமக்குண்டு எனக் கூறிவிட்டு உமர் பின் கத்தாப் (ரழி) அவர்களுக்கு கடிதம் எழுதி விபரம் கேட்டபோது. அவர்கள் விடுக்கின்ற கோரிக்கை நிறைவேற்றுங்கள். இது இராணுவத்திற்கு ஒரு பலத்தை தேடித்தரும் என்ற கருத்தில் மறுமொழி அனுப்பி இருந்தார்கள். இதை அபூமூஸா அல்அஷஅரிய்யி (ரழி) அவர்கள் ஸுத் மக்களுக்கு தெரியப்படுத்திய போது இஸ்லாத்தில் இணைந்து **துஸ்துர்** மாகாண முற்றுகையிலும் கலந்து கொண்டதாக இஸ்லாமிய வரலாறு குறிப்பிடுகின்றது. (1)

முஸ்லிம் படை எடுப்புக்கள் பற்றிய கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கு இந்தப் பின்னணிகள் அவசியமானதாகும்.

ஐரோப்பாவில் மாத்திரமல்ல, மாற்றமாக உலகில் ஏற்பட்ட முஸ்லிம்கள் படை எடுப்புக்கள் மனித சுதந்திரம் விடுதலை, நீதியை நிலைநாட்டுதல் போன்ற உயர் இலட்சியங்களின் அடிப்படையில்தான் போர்கள் நடந்துள்ளனவே அன்றி, அந்த நாட்டின் வளங்களைச் சூறையாடி அம்மக்களை அடிமைப்படுத்தி அவர்களின் மத சுதந்திரங்களை பறிப்பதற்காக, அல்லது இஸ்லாத்தை திணிப்பதற்காக நடத்தப்படவில்லை என்பதை நாம் உணர முடியும்.

---------------------------

(3) الزط وموقعهم في التاريخ الإسلامي - (1 / 21)

## போரை இஸ்லாம் மாத்திரமா மேற் கொண்டது?

இஸ்லாம் மாத்திம் போரில் ஈடுபாடுகாட்டிய மாரக்கம் கிடையாது. மாற்றமாக உலகில் பல மதங்கள் தமது எதிரிகளை எதிர்த்துப் போர்கள் செய்துள்ளன. ஒரு நாடு இன்னொரு நாட்டை அடிமைப்படுத்தி அதன் வளங்களை சூறையாட போர்கள் நடை பெற்றுள்ளன. அவை பாரிய விளைவுகளையும் எதிர் அலைகளையும் சமூகத்தில் தோற்றுவித்திருக்கின்றன என்பதை உலகில் நடை பெற்ற பெறும் யுத்தங்கள் சான்று பகர்கின்றன.

இஸ்லாம் போரை வலிந்து தோற்றுவிக்கவில்லை. இஸ்லாத்தின் எதிரிகள்தாம் போரை வலிந்து தோற்றுவித்தார்கள் என்பதே இஸ்லாமியப் போர்கள் பற்றிய ஆய்வு நமக்கு உணர்த்துகின்றது. இஸ்லாம் மாத்திரம்தான் போரியல் குணம் கொண்ட மதம் போல சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் எவ்வித அடிப்படை ஆதாரங்களும் அற்றவை என்பதை  பின்னர் விளக்கப்படும்.

இஸ்லாமியப் போர்ச் சரித்தரம் பற்றி ஆய்வு செய்கின்ற போது அது பிறமதத்தவர்களை அவர்களின் மன்னர்களின் கெடுதியில் இருந்து பாதுகாப்பதாகவோ, அல்லது இஸ்லாமானது அதன் எதிரிகளிடம் இருந்து தன்னை தற்காத்துக் கொள்வதற்காகவோ, அல்லது இஸ்லாமியப் பேரொளியின் மூலம் மனித சமூகத்தை ஆக்கிரிமித்துள்ள இணைவைப்பு, மனிதன் சக மனிதனை வணங்கும் மௌட்டீகம், காலனித்துவ மன்னர்களிடம் இருந்து பிற மதத்தவர் தம்மைக் காக்கும் படி கொடுத்த அழைப்பிற்கு பதிலளித்தல், இஸ்லாத்தின் தூய திருக்கலிமா ஓங்கி ஒலித்தல் போன்ற  உயரிய நோக்கங்களைக் கொண்டதாக இருந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இஸ்லாமியப் போர், ஒரு இனத்தை தாக்கியழித்து அவர்களின் உதிரங்களை உறிஞ்சிப் பெருமூச்சு விடும் பிறநாட்டு, மதப் போர்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். போர் களத்தில் கைதிகள் நடத்தப்பட்ட உண்ணத முறைகளை இஸ்லாமல்லதவர்கள் இஸ்லாமியப் போரில் இருந்துதான் படிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் இது பற்றிய தெளிவு பின்னர் தரப்படுகின்றது.

ஐரோப்பாவில் ஏற்பட்ட மதக்கலவரங்க்ளில் மாத்திரம் ஐந்து முதல் ஏழு மில்லியன்வரையான மக்கள் கொலை செய்யப்பட்டடுள்ளனர் என்ற ஆதாரபூர்வமான புள்ளிவிபரங்கள் இருக்கின்ற போது இஸ்லாம் உயிர்களை மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் எழுந்ததாகும்.

சிலுவைப்போரின் போரின் போது முஸ்லிம் கற்பிணிப் பெண்களின் வயிறுகளை அறுத்து உதிரத்தில் நடந்தவர்கள் இஸ்லாம் இரத்த தாகம் கொண்ட மார்க்கம் என்று கூறுவது உலகில் கொலை, மனித உரிமை மீறல் போன்ற கொடிய பாவங்களுக்குப் பேர் போன யூதர்கள் ஜனநாயக, மனித உரிமைகள் பற்றிப் பேசுவது போன்றதாகும்.

## ஐரோப்பாவில் இஸ்லாமியப் பரம்பல் பலாத்கார வழியில் அமைந்ததா? (தோமஸ் அர்னோல்டின் அழகிய சாட்சியம்)

இந்தப் பின்னணியில் முஸ்லிம் படை எடுப்புக்கள் பற்றி அணுக வேண்டும். அதுதான் பொருத்தமான வழிமுறையாகக் கொள்ளப்படும். அரபுலகம் பற்றிய பிரசித்தி பெற்ற மேற்கத்தய ஆய்வாளரான **தோமஸ் அர்னோல்டின்** சாட்சிய வரிகள் இவ்வாறு விபரிக்கின்றன.
பதின் ஏழாம் நூற்றாண்டில் சமூகவாழ்வு பாதிக்கப்பட்டிருந்தது. கிரிஸ்தவ மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அம்மதத்தில் இருந்து ஒதுங்கிட ஆரம்பித்தனர். முப்பது வருட குறுகிய கால (1620-1650) எல்லைக்குள் கிட்டத்தட்ட மூன்று லெட்சம் அல்பேனியர் இஸ்லாத்தில் (300.000) இணைந்தனர். 1624-ல் அல்பேனியாவின் அப்ரிஷியா அன்திபாரி பிரதேசத்தில் வெறும் இரண்டாயிரம் கிரிஸ்தவர்கள்தாம் மீதமானார்கள். அதன் நகரில் ஒரோயொரு கிரிஸ்தவக் கோவில் இருந்தது. இந்த ஆண்டு முடிவற்குள் பெருத்பகுதியினர் இஸ்லாத்தில் நுழைந்துவிட்டனர், பிரதம மதகுருக்கள் எனப்படுவோர் மக்கள் இஸ்லாத்தில் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கு தம்மாலான அனைத்து வகையான அக்கிரமங்களையும் கட்டவிழ்த்து விட்டும் இந்நிலை தொடரந்தது…“இஸ்லாத்தில் இப்பிரதேச மக்கள் தம்மை இணைத்துக் கொள்வதில் இறைமறுப்பாளர்களிடம் காணப்பட்ட தீய, அசிங்கமான நடைமுறைதான். மட்டுமின்றி, துர்கிய முஸ்லிம் பெண்களை கிரிஸ்தவர்கள் மணம் முடித்திருந்தனர். அதனால் தமது நம்பிக்கையைக் கைவிட்டு இஸ்லாமிய நம்பிக்கையில் தம்மை இணைத்துக் கொண்டனர்.
மேலும் துர்கிய மக்கள் இவர்களுடன் நடந்து கொண்ட உயரி பண்பாடும் காரணம் என்கிறார் அர்னோல்ட். கிரிஸ்தவ மத குருக்களின் கொடுபிடிகள், சுமக்க முடியாத வரிமுறைதான் பொஸ்னியா கோசோவா பிரதேசத்து மக்களின் இஸ்லாமிய வருகையின் காரணங்களில் ஒன்று என்றும், இஸ்லாம் கிரிஸ்தவம் ஆகிய மதங்கள் இடையே காணப்பட்ட ஒரே முறையான சில வணக்க முறைகளும் அக்காரணிகளில் ஒன்று என்றும் அர்னோல்ட் மேலும் குறிப்பிடுகின்றார்.
அவர்களின் மொழியில் எவ்வித மாற்றமும் கொண்டுவரப்படவில்லை. தமக்குள் காணப்பட்ட கோத்திரமுறைகளை துர்கியர் அங்கீகரித்ததுடன், ஜிஸ்யாவரியில் இருந்தும் விலக்களித்னர். தமது உடைமகைளைத் தாமே நிருவகிக்கும் உரிமையும் வழங்கப்பட்டதோடு, துர்கிய அரசில் அவர்களுக்கு உயர் இடமும் வழங்கப்பட்டது (1) இப்படியான பல காரணங்கள் ஐபேராப்பாவில் இஸ்லாமிய பரம்பலை ஊக்குவித்தது எனக் கூறமுடியும்.

---------------

1- தோமஸ் அர்னோல்ட. **அத்த.ஃ.வா இலல் இஸ்லாம் . மொழி. பெ. நூ. ப- 165- 175)**

## இஸ்லாமியப் படைடுப்புக்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களும் பதில்களும்

### குற்றச்சாட்டு: (1) இஸ்லாமிய வெற்றிகள் மக்களை இஸ்லாத்தில் பலவந்தமாக நுழைவிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**பதில்:** இது பொதுவாக இஸ்லாத்தின் எதிரிகளால் இன்றும் முன்வைக்கப்படுகின்ற முக்கிய குட்டச்சாட்டுகளில் ஒன்றாகக் காணலாம். மார்க்கத்தில் பலவந்தம் இல்லை என்ற அல்குர்ஆனின் கொள்கையை முஸ்லிம் அரசுகள் அச்சொட்டாகப் பின்பற்றியதன் காரணமாகவே முஸ்லிம் அரசின் கீழ் வாழ்ந்த மக்கள், **(أهل الذمة)** (அஹ்லுத்திம்மா- திம்மிக்கள்) முஸ்லிம் அரசின் பொறுப்பின் கிழ் வாழும் சிறுபான்மையினர்- என்ற அடைமொழியுடன் அழைக்கப்பட்டார்கள்.

மட்டுமின்றி, அவர்கள் ஒரு உடன்படிக்கையின் கீழ் முஸ்லிம்களைப் போல சமமாகவும் நடத்தப்பட்டார்கள். அந்த உடன்படிக்கை **(عقد الذمة)** அக்துஸ்திம்மா- என அழைக்கப்பட்டது. அதற்கமைவாக அவர்களின் உயிருக்கும், சொத்துக்கும், இரத்தத்திற்கும் இஸ்லாமிய அரசால் உத்தரவாதம் தரப்பட்டது. ([1])

இதை அடிப்படையாகக் கொண்டுதான் “யார் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் வாழும் சிறுபான்மை இனத்தவரில் ஒருவரைக் கொலை செய்கின்றாரோ அவர் சுவனத்தின் வாடையை நுகரமாட்டார். அதன் வாடை நாட்பது ஆண்டுகள் நடை தூர அளவு காணப்படும் என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள். (2) மேற்படி நபிமொழியை விளக்குகின்ற இமாம் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள்

**وَالْمُرَاد بِهِ مَنْ لَهُ عَهْد مَعَ الْمُسْلِمِينَ سَوَاء كَانَ بِعَقْدِ جِزْيَة أَوْ هُدْنَة مِنْ سُلْطَان أَوْ أَمَان مِنْ مُسْلِم**

ஜிஸ்யாவரி, நாட்டுத்தலைவருடன் செய்யப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை, அல்லது ஒருமுஸ்லிமால் வழங்கப்பட்ட பாதுகாப்பு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதைக் குறிக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

---

(1) மொழி. பெ: வலீத் கமால் ஷுக்ர். مجموعة متنوعة ومختلفة من شبهات النصارى العامة حول أحكام الشريعة

**(2)** புகாரி. ஹதீஸ் இலக்கம்.

(3) فتح الباري لابن حجر

# குற்றச்சாட்டு: (2) இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது.

**பதில்**: இது பரவலாக மேற்கில் இன்றுவரை முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற காணல் நீர் குற்றச்சாட்டுக்களில் ஒன்றாகும். இஸ்லாத்தின் பரம்பலை சகிக்க முடியாத மேற்கத்தியர் இவ்வாறான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை பரப்பி இஸ்லாத்தின் மீது பிறரை சந்தேகம் கொள்ளச் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

மக்கள் குறிப்பாக ஐரோப்பிய சமூகம் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்படுவதைத் தடுக்கவே அவர்கள் இவ்வாறான உக்திகளைக் கையாள்கின்றனர். இஸ்லாம் வாளால் பரப்பப்படவில்லை என்பதை பின்வரும் அடிப்படைகள் ஊடாக விளங்கலாம்.

இஸ்லாம் ஒரு இறைவனை வணங்கி வழிபடுமாறு பணிக்கின்ற மார்க்கமாகும். அதனை ஏற்று நடைமுறைப்படுத்துவோர் முஸ்லிம்கள் என அறியப்படுவார்கள். அல்லாஹ் அல்லாதவைகளை ஒரு மனிதன் வணங்குவது அவன் அவனைப் படைத்த அல்லாஹ்வுக்கு செய்கின்ற அநீதி என்று இஸ்லாம் குறிப்பிடுகின்றது.

இந்த நோக்கத்தினை தெளிவுபடுத்தவே இறைத்தூதர்கள் இந்த உலகில் அனுப்பப்பட்டார்கள். அதை அவர்கள் பலாத்காரப் போர்வையில் போதனை செய்யவில்லை. மாற்றமாக அழகிய உபதேசங்களைக் கொண்டும், பொறுமையாகவும், விமர்சகங்களைப் பொறுத்துக் கொண்டும்தான் போதனை செய்தார்கள். இதை உறுதிப்படுத்தும் ஆதாரபூர்வமான செய்திகள் அல்குர்ஆனிலும், ஹதீஸ்களிலும் இஸ்லாமிய வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளன.

**ஆதாரங்கள்:**

உங்கள் மார்க்கம் உங்களுக்கு. எனக்கு எனது மார்க்கம். (அத்:109 வச:5) .

நபியே நீர் தெளிவாக எற்றிவைப்பதுதான் உம்மீதுள்ள கடமை. கேள்வி கேட்பது நமது கடமை (அத்:13 வச:40)

நீர் உபதேசம் செய்பவரே! நீர் அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துபவர் அல்ல. (அத்:88 வச:21-22)

ஃபிர்அவ்னிடம் நீங்கள் இருவரம் சென்று, அவனுக்கு மென்மையாக (இஸ்லாத்தின் தூதை) எடுத்துச் சொல்லுங்கள். (அத்:20 வச:43-44 )

எனது இரட்சகன் அல்லாஹ் எனக் கூறுவதற்காக இம்மனிதனை (தூதரை)க் கொலை செய்யப் பார்க்கின்றீர்களா? அவர் உங்கள் இரட்சகனிடம் இருந்து தெளிவான சான்றுகளுடன் வந்துள்ளார். அவர் பொய்யராக இருப்பின் அதன் பாவம் அவரைச் சாரும். அவர் உண்மையாளராக இருப்பின் அவர் வாக்களிப்பது உங்களைப் பீடிக்கும் என இறை நம்பிக்கையை மறைத்து வைத்துக் கொண்டிருந்த மனிதர் கூறினார். (அத்:40 வச:28 )

போன்ற அல்குர்ஆனிய வசனங்கள் இறைத்தூதர்களின் பணி பற்றியும், அதன் போது அவர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் பற்றியும் எடுத்துரைக்கின்றன.

## நபித்துக்கால வரலாற்று நிகழ்வுகளில் இருந்து

நபித்துவ வரலாற்றில் சகிப்புடன் நடந்து கொண்டமைக்கான நூற்றுக்கணக்கான சரித்தங்கள் காணப்படுகின்றன.

மக்காவில் இஸ்லாத்தில் இணைந்த ஹப்பாப் பின் அர்த் (ரழி) என்ற நபித்தோழர் ஒருவர் வந்து அல்லாஹ்வின் தூதரே! எமக்காக உதவி வேண்டி (எதிரிகளுக்கு எதிராக) ப்பிரார்த்தனை செய்யவேண்டாமா? என்று கேட்ட போது ஹப்பாப் உங்களுக்கு முன்னால் வாழ்ந்த முஸ்லிம்கள் இருதுண்டங்களாகப் பிளக்கப்படுவார்கள், இரும்புச் சீப்புக்களால் தோல்கள் வார்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் எலும்புகள் தெரியும் அப்போதும் கூட அவர்கள் இந்த மார்க்கத்தை விட்டுவிடவில்லை. அல்லாஹ்வின் மீது சத்தியமாக நிச்சயமாக அல்லாஹ் இம்மார்க்கத்தை பூரணப்படுத்தியே தீருவான், ஆனால் நீங்கள் அவசரப்படுகின்றீர்கள் எனப் போதனை செய்து பொறுமை காக்கும்படி போதனை செய்தார்கள். (புகாரி)

## இஸ்லாமிய வலாற்றுச் சான்றுகள்

முஸ்லிம்கள் சகிப்புத்தன்மையுடன் நடந்தாரகள் என்பதற்கு போரின் போது அவர்களால் பிடிக்கப்பட்ட கைதிகள் குறிப்பு பெரும் சான்றாகும் .

இஸ்லாத்தின் எதிரிகள்தாம் முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்தினார்கள், ஊர்விலக்கல் செய்தார்கள், துன்புறுத்தினார்கள். அடித்து உதைத்து அடாடித்தனம் செய்தார்கள்.

மக்காவில் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்த இறைத்தூதர் முஹம்மத் நபியையும் அவரது போதனையை ஏற்றுக் கொண்ட முஸ்லிம்ககளையும் கடுமையாக வதைத்தார்கள். இதகெல்லாம் முஸ்லிம்கள் அல்லாஹ்விடம் முறையீடு செய்தார்களே அன்றி அவர்களுக்கு எதிராக தமது விரல்களைக் கூட நீட்டிப் பேசவில்லை.

இஸ்லாமிய பிரச்சாரத்தால் செல்வந்தர்கள் உயர் குலத்தவர்கள் எனப் போற்றப்பட்ட அபூபக்கர், உஸ்மான், அலி, உமர், ஹம்ஸா, சுபைர், ஸஃத் பின் அபீவக்காஸ், தல்ஹா, சுபைர் (ரழி) போன்ற உயர்ந்த நபித்தோழர்கள் இஸ்லாத்தில் நுழைந்தார்கள். அக்காலம் வழேந்திய காலமாகவும் இருக்கவில்லை .

எதிரிகளின் கொடுமைகளுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும்தான் வாழ்ந்தார்கள். தமது இரத்த உறவின் அடிப்படையிலாவது தம்மை எதிர்க்காமல் இருக்கும்படி அவர்களை முஹம்மத் நபி அவர்கள் தமது உறவினர்களிடம் வினயமாக வேண்டியும் அது இஸ்ரவேலப் பொலிஸாரிடம் முன்வைத்த கோரிக்கையானது.

பதின் மூன்று ஆண்டுகளாக அநீதி, அக்கிரமம் அடாவடித்தனம் அடக்குமுறை, சமூகப் பகிஷ்கரிப்பு போன்ற கொடுமைகளை சந்தித்த முஸ்லிம்கள் உரிமைகள் அற்ற பிரஜைகளாக நடத்தப்பட்டார்கள்.
அந்த ஆண்டுகளை துக்க நிறைந்த ஆண்டுகளாகவே கழித்தார்கள். எதிரிகளின் தொல்லை அதிகரித்து போது அண்டை நாடுகளில் தஞ்சம் கோரிப் பிரவேசித்தார்கள். அப்போதெல்லாம் பொறுமையின் உச்சியில் வாழ்ந்தார்கள்.

சொந்த ஊரான மக்காவைத் துறந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் என்ற பயணம் மேற் கொண்டு வந்தும் மக்காவாசிகள் நிம்மதியாக இருக்க விடவில்லை. சண்டையிட்டாவது நிம்மிதியாக வாழவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார்கள். தற்காப்புக் காணரம் காட்டி அவர்களின் எதிரியோடு போரிடுவது அனுமதிக்கப்பட்டது.
أُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا وَإِنَّ اللَّهَ عَلَى نَصْرِهِمْ أُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا وَإِنَّ اللَّهَ عَلَى نَصْرِهِمْ لَقَدِيرٌ (39) الَّذِينَ أُخْرِجُوا مِنْ دِيَارِهِمْ بِغَيْرِ حَقٍّ إِلَّا أَنْ يَقُولُوا رَبُّنَا اللَّهُ [الحج : 39 ، 40]
அவர்கள் அநீதி செய்யப்பட்டதைக் காரணமாகக் கொண்டு (எதிரிகளை) எதிர்த்துப் போரிட அனுமதிக்கப்பட்டுள்ளது. நிச்சமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்வதன் மீது ஆற்றல் பெற்றவனாக இருக்கின்றான். அவர்கள் எத்தகையோர் என்றால் எங்கள் இரட்சகன் அல்லாஹ் என்று கூறியதற்காக எவ்வித உரிமையும் இன்றி அவர்களின் இல்லங்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். (அல்ஹஜ்: வச: 39-40) என்ற குர்ஆனிய வசனம் இறங்கியது.
இதுகாலம்வரை அவர்கள் பொறுமை, சகிப்புத்தன்மையுடன் நடந்து இஸ்லாத்தை நடைமுறைப்படுத்த வேண்டப்பட்டிருந்தனர், தமது இரட்சகன் அல்லாஹ் என்று கூறிய காரணத்திற்காகவே அவர்களில் பிரதேசங்களில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் என்பதை இவ்வசனங்கள் உணர்த்துகின்றன. (1)
கிரிஸ்தவர்கள் தமது மதத்தைப் பரப்புவதற்காக பலாத்காரம், ராணுவ அடக்குமுறை போன்ற நடைமுறைகளைக் கையாண்டனர் என்பதற்கு ஆயிரணக்கான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால் இஸ்லாம் அவ்வாறன்று. அது மனித உள்ளங்களில் ஊடுருவிப்பாய்ந்து அவர்களை மனமாற்றம் செய்து விடுகின்றது. இன்தோனேசியாவை எடுத்துக் கொள்ளுங்கள் ஆரம்பத்தில் பௌத்த தர்மத்தை ஏற்றவர்களாகக் காணப்பட்ட அந்நாட்டவர்கள் இஸ்லாமியப் பிரச்சாரத்தினால் கவரப்பட்டு தம்மை முழுமையாக இஸ்லாத்தை வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டார்கள். அங்கு எந்தப்போர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. பொதுவாக உலக வலாற்றில் இஸ்லாமியப் பரம்பலில் ஜிஹாத் என்ற ஆயுதம் பரிமாறப்பட்டது மிக அரிதாகவே இருக்கின்றது.

இஸ்லாம், பிரச்சாரம், நேர்மையான வர்த்தகம், மனிதர்கள் தேடி அலையும் நிம்மதி இஸ்லாத்தில் கிடைக்கின்றமை, கிரிஸ்தவ அரசுகளின் நெருக்குடி, சமத்துவமின்மை, வரிச்சுமை போன்ற காரணங்கள்தாம் இஸ்லாமியப் பரம்பலின் முக்கிய காரணிகளாகும்

-----------------------------------------------------

1- த.்.ப்ஸீர் ஸ.்.தி. மேற்படி வசனத்திற்கான விளக்கம்
2- ஷவ்கி அபூகலீல். அல்இஸ்லாம் ்.பீகப்ஸில் இத்திஹாம்- (ப. 85-87)
3- توماس أرنولد : الدعوة في الإسلام ص :

# குற்றச்சாட்டு (3) பலவந்தமாக மக்களை இஸ்லாத்தில் நுழைவிப்பதற்காகவே ஜிஹாத் செய்தனர்

**பதில்: இம்மார்க்கத்தில் பலவந்தம் இல்லை ( ) என்ற வசனத்தின் மூலம் அது மறுதலிக்கப்படுகின்றது. அவர்கள் உம்முடன் போருக்கு வரும்வரை நீர் அவர்களுடன் போருக்குச் செல்ல வேண்டாம் ( )**

அல்குர்ஆனில் போர் செய்வதைச் சுட்டிக்காட்டுகின்ற சொற்களாக கிதால்- ஜிஹாத் என்ற இரு சொற்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. **ஜிஹாத்** என்ற சொல் **ஜஹத** முயற்சித்தான், சிரமப்பட்டான் என்ற பொருள் தரும் சொல்லில் இருந்து பிறந்ததாகும். அவ்வாறு பார்க்கின்றபோது ஜாஹத என்றால் ஒருவர் தனது சக்தி, ஆற்றலை சிலவு செய்து மேற்கொள்ளும் முயற்சி என்ற பொருள் கொள்ளப்படுவதுடன், எதிரியை எதிர்த்துப் போராடுவதும் **ஜிஹாத்** என்றும் கொள்ளப்படும்

அரபியில் ஜாஹத என்ற சொல் ஒரு மனிதன் தனது சக்திக்கும், முயற்சிக்கும் உட்படடவாறு ஈடுபடுவதை, செலவழிப்பதைக் குறிப்பதுடன் எதிரியை எதிர் கொண்டு போராடுவதையும் குறிப்பிடுகின்றது என்பது அத்துறை சார்ந்த அறிஞர்களின் கருத்தாகும். வாளால் கொல்லுதல் என்ற கருத்து எங்கும் தரப்படவில்லை.

மக்காவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்த போது فَلَا تُطِعِ الْكَافِرِينَ وَجَاهِدْهُمْ بِهِ جِهَادًا كَبِيرًا [الفرقان : 52] அதை (குர்ஆனை) க்கொண்டு அவர்களுடன் ஜிஹாத் செய்வீராக என்ற வசனம் இறங்கியுள்ளது. மக்காவில் போர் கடயைாக்கப்பட்டிருக்கவுமில்லை. அப்படியானால் இது மொழிய அடிப்படையில் எவ்வகையான பொருள் கொள்ளப்படும் என்று சிந்திக்க வேண்டும்.

جاهَدَ فلانٌ: بَذَلَ مافى وُسْعِه وطاقَتِه (بحوث ودراسات في اللهجات العربية من إصدارات مجمع اللغة العربية بالقاهرة - (8 / 37)

و- العَدُوَّ : قَاتَلَه . وفى القرآن الكَرِيم : { يأَيُّها النَّبِىُّ جاهِدِ الكُفَّارَ والمُنافِقِينَ واغْلُظْ عَلَيْهِم } . ( التوبة / 73). بحوث ودراسات في اللهجات العربية من إصدارات مجمع اللغة العربية بالقاهرة - (37 / 8

இஸ்லாமியப் பிரச்சாரம் சமூகத்தில் பிரிவினையைத் தோற்றுவிப்பதும் ஒரு நோக்கமாகக் கொண்டது அதை போர்கள் மூலம் நிலை நாட்டப்பட்டது என்ற குற்றச்சாட்டும் ஜிஹாதுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது.

இஸ்லாம் பற்றிப் போதிக்க அனைத்து தூதர்களும் பிரவினைவாதிகளாகவே நோக்கப்படுகின்றனர். லூக்கா அதிகாரம்: 12-49- ல் இயேசுவின் போதனை பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது.

“பூமியின் அக்கினியைப் போடவந்தேன், அது அப்பொழுதே பற்றி எரிய வேண்டும் என்று விரும்புகின்றேன்” (1)

“நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்க வந்தேன் என்று நினைக்கின்றீர்களோ? சமாதானத்தை அல்ல, பிரிவினையையே உண்டாக்க வந்தேன், என்று உங்களுக்குச் சொல்கின்றேன். எப்படி எனில், இது முதல் ஒரே வீட்டிலே ஐந்து பேர் பிரிந்திருப்பார்கள். இரண்டு பேருக்கு விரோதமாய் மூன்று பேரும், மூன்று பெருக்கு விரோதமாய் இரண்டு பேரும் பிரிந்திருப்பார்கள். தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும் தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமியாருக்கும் விரோதமாய்ப் பிரந்திருப்பார்கள் என்றார். (2)

**இஸ்லாமியப் போரின் நோக்கங்கள்.**

இஸ்லாத்தில் போர் பின்வரும் அடிப்படையில் கடமையாக்கப்பட்டிருக்கின்றது.

1- தற்காப்பு. அநீதியைத் தட்டிக்கேட்டல், மனிதர்களுக்கெதரின மனித அடக்குமுறைகளை இல்லாதொழித்தல்.
2- மூளையை அடகுவைக்கின்ற மனிதர்களை மனிதர்கள் வணங்குதல் என்ற நிலையில் இருந்து விடுவித்து, சுதந்திரம் பறிக்கப்பட்டகைதிகளாக இருப்பவர்களை சுதந்திர மனிதர்கள் என்ற நிலைக்கு உயர்த்துதல். மேலும் அதன் கொள்கைள் கோட்பாடுகளைப் மனிதர்கள்ன மத்தியில் பரப்புதல்
3- மார்க்கத்தில் உங்களிடம் அவர்கள் உதவிக்கோரிக்கை விடுத்தால் நீங்கள் உதவுவது கடமை என்ற குர்ஆன் வசனத்திற்கு அமைவாக அநீதி செய்யப்பட்டோரின் அபயக்குரலுக்கு பதில் அளித்தல். ஆரம்பகால முஸ்லிம்கள் இஸ்லாத்தை மக்களுக்குக் கொண்டு செல்லவில்லை. மாற்றமாக பல சமூகங்களை இஸ்லாத்தினுள் கொண்டுவந்து சேர்த்தனர். என மேன்கத்திய ஆய்வாளர்களில் ஒருவரான டுவன்பீ என்பவர் குறிப்பிடுகின்றார். (1)

---------------------

1- லூக்கா அதிகாரம்: 12-49-
2- லூக்கா அதிகாரம்: 12- வரிகள்: 51- 53
3- ஷவ்கி அபூகலீல். அல்இஸ்லாம் ∴பீகப்ஸில் இத்திஹாம்- (ப. 85-87)

**குற்றச்சாட்டு: (4) ஜிஸ்யா என்ற பெயரில் வரிகள் விதித்து சிறுபான்மையினரை வதைத்தனர்.**
**பதில் : முஸ்லிம் அரசால் ஜிஸ்யா வரி சிறுபான்மையினர் மீது இரு நோக்களுக்காக விதிக்கப்படுகின்றது.**

(1) அவர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளைத் தவிர்த்தல்.

(2) போரற்ற பாதுகாப்பின் மூலம் அவர்கள், பாதுகாப்புடனும், நிம்மதியாகவும் வாழ அவர்களின் உயிர், பொருட்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குதல். இவை இஸ்லாமிய அரசு விதிக்கும் வரியின் நோக்கமாகும். (1)

வேதம் கொடுக்கப்பட்ட மக்கள், மற்றும் சிறுபான்மையினர் மீது இஸ்லாமிய அரசு விதித்த சாதாரண வரியை விட பன்மடங்கு அதிகமான வரியை முஸ்லிம்கள் மீது விதித்திருந்தது. மட்டுமின்றி, சிறுபான்மை மக்களிலுள்ள பெண்கள், சிறுவர், வறியோர், துறவிகள், அங்கவீனர்கள், மடாதிபதிகள், புத்திசுயாதீனமற்றோர், ஊனமுற்றோர் போன்றோர் இவ்வரி முறையில் இருந்து முழுமையாக விதிவிலக்களிக்கப்பட்டிருந்தனர். ஜிஸ்யா வரியிலும் கூட பொருளாதார நிலைகள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.
அத்துடன், இயலாதவர்கள், முதியோர், வயோதிபர் போன்றவர்களுக்கு இஸ்லாமிய அரசு மானிய உதவிகளை மனிதாபிமான முறையில் செய்தது. இஸ்லாத்தை தவிர வேறு எந்த கொள்கையிலும் இவ்வாறான நடைமுறை கையாளப்பட்டதை இஸ்லாத்தின் மீது தவறான குற்றச்சாட்டுக்களை முன்வைப்போரால் காட்ட முடியாது.

--------------------------

(1) الأحكام السلطانية للماوردي - (1 / 282)

**ஜிஸ்யா வரி** என்பது என்றும் முஸ்லிமல்லாதவர்கள் இஸ்லாத்தை ஏற்க மறுத்ததற்காக அவர்கள் மீது சுமத்தப்பட்ட ஒரு தண்டனை கிடையாது.

கீழைத்தை அறிஞர்களில் ஒருவரான தோமஸ் அர்னோல்ட் அவர்கள் الدعوة إلى الإسلام இங்கு பதிவு செய்வது பொருத்ததமானதாகும்.

**يقول المستشرق الانجليزي توماس أرنولد في كتابه الدعوة إلى الإسلام: لم يكن الغرض من فرض هذه الضريبة ـ يعني الجزية ـ على النصارى، كما يريدنا بعض الباحثين على الظنّ، لونًا من ألوان العقاب لامتناعهم عن قبول الإسلام، وإنما كانوا يؤدُّونها مع سائر أهل الذمة وهم غير المسلمين من رعايا الدولة الذين كانت تحول ديانتهم بينهم وبين الخدمة في الجيش في مقابل الحماية التي كفلتها لهم سيوف المسلمين .واين نجد ذلك ايضا في كل بلاد العالم ؟ نظرنا فلم نجد الحماية لاهل البلاد انفسهم فكيف بالوافدين عليها ؟** (1)

**கிரிஸ்தவர்கள் மீதான ஜிஸ்யா வரிவதிப்பின் நோக்கம், சிலர் நினைப்பதைப் போலஇஸ்லாத்தில் அவர்கள் நுழைவதை மறுத்தற்காக மேற்கொள்ளப்பட்டதன்று. அவர்கள் மாத்திரம் அந்த வரியை நிறைவேற்றவில்லை. மாற்றமாக ஏனைய சிறுபான்மை பிரஜைகளுளோடு முஸ்லிம் படை வழங்கிய பாதுகாப்பிற்காகவும், தமது மதக் கோட்பாடுகளை கடைப்பிடிக்கவும் நிறைவேற்றினர். இது உலகில் மற்றநாடுகளில் காணமுடியுமா என்று நாம் பார்த்த போது தமது சொந்தப் பிஜைகளையே பாதுகாக்கதாத அரசுகளா தனது நாட்டில் பணிபுரியம் பணியாளர்களை பாதுகாக்கும் என்ற கேள்வி இருக்கின்றது?**

மட்டுமின்றி, முஸ்லிம்கள் தம்முடன் செய்து கொண்ட உடன்படிக்கையை சிறப்பாகப் பாதுகாத்தனர். திம்மிக்களில் வரிசெலுத்த முடியாதவர்களிடம் இருந்து ஜிஸ்யா வரியைத் தள்ளுபடியும் செய்தனர். தமது ஒப்பந்தத்தை பாதுகாக்க முடியாது என்ற நிலை வருகின்ற போதும் ஜிஸ்யாப் பணத்தை அம்மக்களிடம மீளளித்தனர். இதை அபூஉபைதா (ரழி) அவர்கள் ரோம்மக்களுடன் நடந்து கொண்ட முறையைச் சுட்டிக்காட்டிட முடியும்.

வடபிராந்திய எல்லையில் ரோம் பல்லாயிரக்கணக்கான படைவீரர்களை ரோம் குவித்திருந்தது. அவற்றிற்கு பின்னால் முஸ்லிம்கள் பாதுகாப்பு வழங்கிய பல நகரங்கள் பாதுகாப்பு வழங்க முடியாத நிலையில் காணப்பட்டது.

: «إنما رددنا عليكم أموالكم، لأنه قد بلغنا ما جمع لنا من الجموع، وإنكم اشترطتم علينا أن نمنعكم وإنا لا نقدر على ذلك، وقد رددنا عليكم ما أخذنا منكم، ونحن لكم على الشرط، وما كتبنا بيننا وبينكم إن نصرنا الله عليهم». فلما قالوا ذلك لهم وردوا عليهم الأموال التي جبوها منهم قالوا :ردّكم الله علينا ونصركم عليهم (2)

அப்போதைய படைத்தளபதியான அபூஉபைதா (ரழி) அவர்கள் அவர்களின் கவர்னர்கள் ஒவ்வொருவருக்கும் " உங்களுக்கு பாதுகாப்புத் தருவதாகக் கூறியே உங்களிடம் இருந்து ஜிஸ்யா, மற்றும் (கராஜ்) நிலவரி வரி பெற்றோம். அந்த உறுதி மொழியை எம்மால் தற்போது நிறைவேற்ற முடியாத விதமாக எம்மைச் சுற்றி ரோமப்படைகள் வளைந்துள்ளன. அதனால் நாம் உங்கள் பணங்களை மீண்டும் கையளிக்கின்றோம். நாம் உடன்படைக்கையின் படி நடப்பவர்கள். அல்லாஹ் எமக்கு வெற்றியைத்தந்தால் உங்கள் பணத்தை நாம் பெற்றுக் கொள்வதாக உறுதி மொழி தருகின்றோம் என எழுதினார். அம்மக்களுக்கு அதைக் கூறியதும் அவர்கள் தமது பணங்களைப் பெற்றுக் கொண்டு அல்லாஹ் உங்களுக்கு நல்லதை வழங்கி அவர்களுக்கு எதிராக உங்களுக்கு வெற்றியைத் தரட்டுமாக என எழுதி அனுப்பினார்கள். (2)

-------------------------------------

தகவல் 1- **: http://www.kalemasawaa.com/vb/t8706.html** الرد البتار على من قال بهمجية **فتوحات الاسلام**

2- **187** (فتوح البلدان للبلاذري )

ஜிஸ்யா வரி என்பது வேதம் கொடுக்கப்பட்டோரில் முஸ்லிம் அரசுக்கு எதிராக போர் முரசுகொட்டிக்கொண்டிருந்தோர் மீது விதியாக்கட்ட ஒரு சாதரண வரி நடைமுறையாகும். ஆனால் முஸ்லிம்கள் மீது ஸகாத், ஸதகா, படைச் செலவுகள் பாரிய வரிச்சுமைகள் இருந்தன. போரின் போது தமது உடைமைகளை விட்டுக்கொடுத்து அறபணம் செய்ய வேண்டிய நிலை இருந்தது.

ஜிஸ்யா வரியைக் காணரம் காட்டி இஸ்லாத்தை விமர்சனம் செய்வோர் அத்தௌபா – 29 வது வசனமாக இடம் பெறும் குர்ஆன் வசனத்தின் விளக்கம் புரியாது அதற்கான குற்றச்சாட்டினை முன்வைப்பதை அவதானிக்க முடிகின்றது .

அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பாத, அல்லாஹ்வும் அவனது தூதரும் ஹராமாக்கியதைத் தவிர்ந்து கொள்ளாத வேதம் கொடுக்கப்பட்டவர்களில் சத்திய மார்க்கத்தை (இஸ்லாத்தைக்) கொண்டு எடுத்து நடக்காதவர்ளோடு அவர்கள் சிறுமை அடைந்தவர்களாக இருக்கம் நிலையில் ஜிஸ்யாவரியை செலுத்தும் வரை நீங்கள் போராடுங்கள் என்பதே அந்த வசனம்.

இதை சிறுபான்மையினருக்கு அநீதி செய்கின்ற, வாழ்ரிமை அற்றவர்களாக அவர்களை நடத்துகின்ற வசனம் என விசனம் தெரிவிக்கின்றனர். உண்மையில் ஜிஸ்யா என்ற சொல்லின் பொருள் பற்றி அறிந்திருப்பின் இவ்வாறு பெசமாட்டார்கள்.

பாதுகாப்பின் நிமிர்த்தம் சிறுபான்மையினரால் வழங்கப்படும் கூலி என்பதே இதன் பொருளாகும். இதை அரபு மொழி அறிஞர்கள் உறுதி செய்துள்ளனர்.

قال الباجي: "الجزية تؤخذ منهم على وجه العوض، لإقامتهم في بلاد المسلمين والذبِّ عنهم والحماية لهم

முஸ்லிம்களின் பிரதேசங்களில் வாழ்வளிக்கப்படுகின்றமைக்காகவும், அவர்களுக்கு பாதுகாப்பளிக்கப்படுவதற்காகவும் சிறுபான்மையினரிடம் இருந்து பெறப்படும் பதலீட்டுத்தொகைதான் ஜிஸ்யா என்கிறார் அல்பாஜி என்ற அறிஞர்.

ولو كانت الجزية عقوبة على الكفر لما أسقطت عن النساء والشيوخ والأطفال لاشتراكهم في صفة الكفر، بل لو كان كذلك لزاد مقدارها على الرهبان ورجال الدين، بدلاً من أن يُعفوا منها

இறைமறுப்பிற்காகத்தான் ஜிஸ்யா வரிவிதிக்கப்படுகின்றது என்றிருப்பின், பெண்கள், வயோதிபர், சிறுவர் போன்றோரை விட்டும் அவர்களிடம் இறை நிராகரிப்பு என்ற பண்பு காணப்படுவதால் அது விலக்கல் செய்யப்பட்டடிருக்கமாட்டாது. மாத்திரிமின்றி, மடாதிபதிகள், மதபோதகர்கள் மீது அது விலக்கல் செய்யப்படுவதை விட்விட்டு அதிகரிக்கப்பட்டிருக்கும் (1) ஜிஸ்யா வரி இஸ்லாம் புதிதாகக் கொண்டுவந்த ஒரு வரிமுறை கிடையாது. மாற்றமாக, யூத, கிரிஸ்த மதங்களில் பரவலாகக் காணப்பட்டதாகும். பைபளின் பழை ஏற்பாட்டில் மத்தேயு சுவிசேஸத்தில் இவ்வாறு கூறப்படுகின்றது.

**ஜிஸ்யா வரிமுறை என்பது இஸ்லாம் புதிதாக அறிமுகப்படுத்திய ஒன்றல்ல. மாற்றமாக முன் சென்ற வேதங்களில் பரவலாகக் காணப்பட்ட நடைமுறை என்பதுதான் உண்மை.** இது பற்றி பைபிள் பழைய ஏற்பாடு இவ்வாறு குறிப்பிடுகின்றது.

அவர்கள் கப்பர்நகூமில் வந்த போது, வரிப்பணம் வாங்குகின்றவர்கள் பேதுருவினடத்தில் வந்து உங்கள் போதகர் வரிப்பணம் செலுத்துகிறதில்லையா? என்று கேட்டார்கள்.

செலுத்துகின்றார் என்றார். அவன் வீட்டிற்குள் வந்த போது, அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி: சீமானே! உனக்கு எப்படித் தோன்றுகின்றது? பூமியின் ராஜாக்கள் தீர்வையையும், வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்திலோ, அந்நியரிடத்திலோ யாரிடத்தில் வாங்குகின்றார்கள் என்று கேட்டார். அதற்கு பேதுரு அந்நியனித்தில் வாங்குகிறார்கள் என்றான். இயேசு அவனை நோக்கி: அப்படியானால் பிள்ளைகள் அதைச் செலுத்த வேண்டுவதில்லையே. ஆகிலும், நாம் அவர்களுக்கு இடலாயிராதபடிக்கு, நீ கடலுக்குப் போய், தூண்டில் போட்டு, முதலாவது மீனைப்பிடித்து அதன் வாயைத் திறந்து பார் ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய். அதை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார். (2)

இஸ்லாத்தைப் போன்று கிரிஸ்தவ சமயத்திலும் வரிமுறை இருந்துள்ளது. மதத்தின் பெயரால், அரசின் பெயரால் ஆட்சி செய்தவர்கள் பொதுவாக வரி அறவீட்டு முறையை நடைமுறைப்படுத்தியே ஆட்சி செய்துள்ளனர் என்பதை வரலாற்றில் பார்க்கின்றோம்.

இஸ்லாமிய வரிஅறவீட்டு முறையைப் பொறுத்தவரை மக்களின் பொருளாதார நிலைமைகளைக் கவனத்தில் கொண்டதாகவும், சுமைகள் அற்றதாகவும், செலுத்த முடியுமான தொககைகைளக் கொண்டதாகவும் இருந்துள்ளது இஸ்லாத்தில் சிறப்பம்சமாகும்.

இஸ்லாமியப் போராளிகள் இஸ்லாம், அல்லது வாளுக்கு இரையாகுதல் என்ற கோட்பாட்டில் இருந்து விலகி இஸ்லாம் அல்லது பாதுகாப்பிற்கான **ஜிஸ்யா** ஆள்வரி என்றே பிரகடனம் செய்தனர். இந்த நடைமுறையை இஸ்லாத்தில் மாத்திரமல்ல **எலிஸிபத்** மகாராணியின் ஆட்சியின் போது ஆங்கிலிய நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. அதனால்தான் மேற்கத்தைய ஆவரலாற்று ஆய்வாளரான **டுவன்பீ** என்பவர் “மேற்கில் அறவீடு செய்யப்படும் வரித்திட்டம் கிரிஸ்தவத்தில் முன்மாதிரயானாதா மேற்கில் முன்மாதிரி வழிமுறையாகவும், கிழக்கில் பின்பற்றப்படும் இஸ்லாம், அல்லது **ஜிஸ்யா** வரி எப்படி வெறுக்கப்பட்டதாகவும் கொள்ளப்படும். இது ஓரங்கமான பார்வை இல்லையா என கேள்வி எழுப்புகின்றார்.

ரோமக் கிரிஸ்தவ ஆட்சியில் வாழ்ந்த மக்கள் அனுபவித்த துன்பங்களில் வரிச் சுமைத்துன்பமும் ஒன்றாகும். அதில் இருந்து விடுதலை பெறவே முஸ்லிம்களின் ஆட்சியில் காணப்படும் சாதாரண வரிமுறை, மற்றும் இஸ்லாமிய அரசால் வழங்கப்படுகின்ற மத சுதந்திரத்தைப் பெற்று நிம்மதியாக வாழவே பலர் இஸ்லாமிய அரசின் கீழ்வாழ விருப்பம் தெரிவித்தனர். இதுதான் வரலாறு. முஸ்லிம்கள் ஜிஸ்யாவரி எடுத்த மக்களைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர். முடியாத போது அதனை அம்மக்களிடம் மீள்அளித்துள்ளனர். இது இஸ்லாமிய ஆட்சியில் காணப்பட்ட சிறப்பம்சமாகும். (2)

----------------------------------

1- மத்தேயு அதிகாரம் 17-ல் 24-25
2- ஷவ்கி அபூகலீல்- அல்இஸ்லாம் ∴பீக∴ப்ஸில் இத்திஹாம். ப: 86.

## குற்றச்சாட்டு: பிற மதத்தவரின் பொருள்களை ஜிஹாதின் பெயரால் சூறையாடினர்

ஈராக் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் 2003ல் தொடுத்த போர்தான் அந்நாட்டின் பெற்றோலிய வளங்களைக் கொள்ளையடிப்பதற்கான போர். முஸ்லிம்கள் எந்த மதத்திலும் வெறுக்கப்பட்ட காரியத்தை போரின் பெயரால் அரங்கேற்றவே கிடையாது என்பதே உண்மை.

கிரிஸ்தவ மதம் என்பது பலாத்காரத்தினால், மன்னர்களின் கெடுபிடிகளினாலும் பரப்பப்பட்டதே தவிர பிரச்சாரத்தின் மூலமாக அல்ல என்பதை கிரிஸ்தவப் பரவல் பற்றிய ஆய்வுகள் மூலம் அறிய முடிகின்றது.

முஸ்லிம்கள் இஸ்பைனைக் கைப்பற்றியதும் அவர்கள் கொள்ளையில் ஈடுபடவில்லை, அதன் வளங்களைச் சூறையாடவுமில்லை. மாற்றமாக இஸ்லாமிய கலாசாரத்தினையும், அதன் பண்பாட்டினையும் அங்கு விதைத்தனர். கிரேக்க நூல்களை மொழியாக்கம் செய்யும் பாரிய பணி தொடர்ந்தது, கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன, இருளில் மூழ்கிக்கிடந்த ஐரோப்பாவிற்கு அறிவொழி பாய்ச்சப்பட்டது. அதனால் ஐரோப்பா தனது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து எழுந்து கொஞ்சம் சிந்திக்க ஆரம்பித்தது.

ரோஜர்ஸ் பேர்கன், (1214-1294) என்பவர் அரபு அறிவுகளுடன் ஆளமான புலமை பெற்றவராக இருந்தார். பிரான்ஸிஸ் பேகன், கலிலியோ போன்றவர்கள் அவரின் பின் வந்தனர். இவர்களின் அறிவுத்துறைக்கு அர்ராஸி, ஜாபிர் பின் ஹய்யான், இப்னுல்ஹைஸம், இப்னு ந.ஃபீஸ் போன்ற முஸ்லிம் அறிஞர்கள் இவர்களின் முன்மாதிரி முன்னோடிகளாக விளங்கினார்கள்.

இதுபற்றிய தெளிவான விளக்கத்தினை தோமஸ் அர்னோல் என்பவரின் நூலில் காணமுடிகின்றது.

கி.பி. 1798ல் நெப்போலியன் தலைமயிலான படை எகிப்தை ஆக்கிரிமித்தது. அது பிரான்ஸியப் படை எடுப்பு- ஆக்கிரிமிப்பு- என்றுதான் அறியப்படுகின்றது. எகிப்துக்கும் அரபு பிரதேசங்களுக்கும் ஒளிர்ஊட்டும் எழுச்சிப் படை எடுப்பு என்றுதான் மேற்கின் வரலாற்றாய்வாளர்களால் வர்ணிக்கப்படுகின்றது.

உண்மையில் அது ஜபர்தீ, அல்பக்தாதி, சுபைதீ போன்ற அறிஞர்களால் கொண்டுவரப்பட்ட இஸ்லாமிய எழுச்சியினை மழுங்கச் செய்வதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரிமிப்பாகும். எகிப்து ஆக்கிரிமித்து மூன்று ஆண்டுகளுக்குள் கைரோவில் காணப்பட்ட அறிஞர்களின் கைஎழுத்துப் பிரதிகள் அனைத்தும் சூறையாடப்பட்டு பாரீஸ் நகருக்கு கொண்டு செல்லப்பட்டது. என்று முஸ்லிம் ஆய்வாளரான மஹ்மூத் முஹம்மத் ஷாகிரி என்பவரால் நோக்கப்படுகின்றது.

எகிப்திய ஆக்கிரிமிப்பைத் தொடர்ந்து வந்த பிரான்ஸின் காலணித்துவம் கி.பி 1847ல் அப்துல்காதிர் அல்ஜஸாயிரீ என்பவரால் முறியடிக்கக்கப்படும் வரை அல்ஜீரியாவின் அதன் காலணித்து அட்சகாசம் தொடர்ந்தது. அல்ஜீரிய ஆக்கிரிமிப்பின் போது பாரிய இனச் சுத்திகரிப்பு நடை பெற்றது.

------------------------

1- الإسلام والغرب شقاق أم وفاق ؟ للدكتور نصر بن محمد الصنقري

அல்ஜீரியாவை ஆக்கிரிமித்து நூறு ஆண்டுகள் பூர்தியாகும் போது தோனீஸியாவை பிரான்ஸ் ஆக்கிரிமித்து அங்கு பாரிய மனித மற்றும் கலாசார அழிவை உண்டாக்கியது. இதன் பின் கி.பி. 1916-ல் வட ஆபிரிக்காவை ஆக்கிரிமித்து அட்டுளியம் புரிந்தது. (1)

இவற்றை எல்லாம் ஒரு பக்கம் வைத்து விட்டு 2003 ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டின் போன்ற நாடுகள் அரங்கேற்றிய அணுஆயுதப் பூச்சாண்டிப் போரினால் இன்றுவரை ஐந்து இலட்சம் குழந்தைகள் கொல்லப்பட்டு பல இலட்சம் உயிர்கள் பறிக்கப்பட்டு பலமில்லியன் பேர் அகதிமுகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனரே.வெள்ளையரின் பரிசபாசையில் இது கொள்ளை அல்ல.

-----------------

1- الإسلام والغرب شقاق أم وفاق ؟ للدكتور نصر بن محمد الصنقري ص- 36

# முடிவுரை:

இஸ்லாத்திற்கு எதிராக டொண் கணக்கில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இறுதியில் அனைத்தும் புஷ்வானமாகிவிடுகின்றன. அதற்குக் காரணம் குற்றச்சாட்டுக்கள் அறிவுப்பூர்வமானதாக இல்லை என்பதைத் தவிர வேறு எதுவும் இல்லை.

இலங்கை போன்ற நாடுகளில் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்ற பல குற்றச்சாட்டுக்கள் மேற்கில் இல்லை என்பதைப் பார்க்கின்ற போது இஸ்லாத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறான அம்சங்களில் முன்வைக்கப்படுவது புலனாகின்றது.

முஹம்மத் நபிக்கு எதிராகவும் அவர்களின் போர் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் வெறும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் இன்றுவரை மேந்கால் முன்வைக்கப்பட்ட வண்ணமுள்ளன.

மேற்கத்தய எழுத்தாளரும், ஆய்வாளருமான தோமஸ் அர்னோல்ட் போன்ற நடுநிலையாளர்களால் அவை தவிடு பொடியாக்கப்பட்டிருப்பது இஸ்லாத்திற்கு கிடைத்த வெற்றியாகும்.

அந்த வகையில் மிகப் பிரசித்தி பெற்ற, சர்வதேச அளவில் குறிப்பாக மேற்கில் பேசப்படுகின்ற குற்றச்சாட்டுக்களில் முக்கியமானது என்பதை இனம் கண்டு அவற்றிகு ஆதாரபூர்வமான, அறிவுப்பூர்வமான அடிப்படையில் எம்மால் முடிந்தளவு பதில் தரப்பட்டுள்ளது.

எனது இந்த சிறிய முயற்சியில் அல்லாஹ் அபிவிருத்தியையும் இஸ்லாத்திற்கு நற்பேரையும் ஈட்டித்தர அவனிடம் பிரார்த்தனை செய்கின்றேன். எனக்கு எல்லா வகையில் கல்வியிலும், ஒழுக்கத்திலும் வழிகாட்டிய எனது பெற்றோர்கள், ஆசிரியர்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அனைவருக்கும் அவன் நல்லருள் செய்து சுவனத்தின் வாரிசுகளாக ஆக்குவானாக என அந்த அல்லாஹ்வை இறைஞ்சுகின்றேன்.

**இவண்:**

**எம். ஜே. எம். ரிஸ்வான்**

*பதிவு இலக்கம்:* HD/ MA/ 08-09-/559

மாணவர்: அரபு இஸ்லாமிய நாகரீக கற்கைள் துறை பேராதனைப் பல்கலைக்கழகம். பேராதெனிய

# المصادر والمراجع


2- ا لقرآن الكريم

3- الندوى ، أبو الحسن علي ، ماذا خسر العالم بانحطاط المسلمين

4- حنبل ، مسند أحمد ين حنبل

5- ابن الأثير : النهاية في غريب الأثر

6- شوقي أبو خليل، الإسلام في قفص الاتهام

7- محمد قطب، شبهات حول الإسلام – دار الشروق

8- الزط وموقعهم في التاريخ الإسلامي

9- ابن حجر العسقلاني ، فتح الباري شرح صحيح البخاري

10- توماس ارنولد، الدعوة إلى الإسلام

11- البخاري، محمد بن إسماعيل ، الصحيح الجامع

12- الماوردي ، الأحكام السلطانية

13- البلاذري فتوح البلدان

14- الصنقري الدكتو نصر بن محمد ؟ ر الإسلام والغرب شقاق أم وفاق

15- علي أحمد سيد أحمد علي، الفتوحات الإسلامية بين الآل والأصحاب من إصدارات مبرة الآل والأصحاب- دولة الكويت

16- الصلابي، الدكتور، على محمد الصلابي ، الفتح الإسلامي في الشمال الأفريقي

17- பரிசுத்த வேதாகமம்

المواقع الإسلامية ، والمجلات والمقالات :

1- موقع قصة الإسلام

2- http://www.kalemasawaa.com/vb/t8706.html

3- http://sbeelalislam.org/index.php/2011-10-18-22-46-07/145-20...

4- محمد بن حامد الناصر ، مجلة البيان دراسات في السيرة والتاريخ ماذا وراء الهجوم على التاريخ الإسلامي ؟

5- التغريب


eBook by: www.islamkalvi.com